மலர் 13] விஜயஹு பங்குனிமீ 10—4—54 [இதழ் 5

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

காரைக்குடி கம்பன் கழகத்தில்



தருமை, குன்றக்குடி, செங்கோல் மடம்
ஆகிய மூன்று மகாசந்நிதானங்களுக்கும் வரவேற்பு

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர்.

தருமபுர ஆதீன

364

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 13] விஜயஸு பங்குனிமீ 10—4—54. [இதழ் 5

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## மரமும்-கிளையும்.

மரம் பலகிளைகளைத் தாங்கிக்கொண்டிருக்கிறது. தன் வேரால் உட்கொண்ட உணவுப்பொருள்களைக் கொடுத்துக் கொடுத்துக் கிளைகளைப் போஷிக்கிறது. கிளைகளோ காற்றில் மிதந்துவரும் நீரையும் உணவையும் நாம் விடும் கரியமில வாயுவையும் இலைகளால் உண்டு மரத்திற்கு உதவி செய் கின்றன. மரம் அசையாது அழியாது நிலைத்து நிற்கின்றது. கிளைகள் எட்டுத் திசைகளிலும்சென்று மரத்தின் பெருமை யையும் வன்மையையும் விளக்கி மரத்திற்குப் பலமாகின்றன. அதுபோல மரம் கடவுள் கொள்கை. கிளைகள் அக்கொள் கையைப் பரப்ப எட்டுத்திசைகளிலும் எத்தனையோ அனுஷ் டான பேதங்களோடு பரவியுள்ள சமயங்கள். கிளைகளின் இலைகள் உயிர்களுக்கு உயிர்ப்புக்காற்றை (பிராணவாயு) உதவி உணர்ச்சியைப் பெருக்கிப் பாதுகாத்துவரும் மத ஸ்தாபனங்களாகிய மடாலயங்கள். இலைகளின் நடுநரம்பு

365



மதத்தலைவர்கள். படர் நரம்புகள் தமதில்வாழ்வைத் தியாகஞ் செய்து தன் நலம்விட்டு உலகமே ஒரு சூழல் என்ற நிலையில் சமய முன்னேற்றம் ஒன்றே தமது குறிக்கோளாகக்கொண்டு உழைத்துவரும் அடியார் பெருமக்கள்.

இந்த நிலையைத் திருவுளங்கொண்ட எங்கள் தருமையாதீனத்து இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தாம் அருளாட்சி ஏற்ற அடுத்த அடுத்த ஆண்டுகளிலேயே பல கிளைகளைப் போலிருக்கின்ற பல மதங்களின் இலைகளாகிற மதத்தலைவர்கள் ஒன்றுகூடி கடவுள் உணர்ச்சி என்ற கற்பகதருவை வளர்க்கவேண்டும் — உலகில் பதிஞானமாகிய பிராணவாயுவை உலவச்செய்தல்வேண்டும் நாத்திகமாகிய நச்சுக்காற்று மாறவேண்டும் — எங்கும் கடவுள் ஒருவர் உண்டு என்ற வகையில் ஒருமித்த முயற்சி வேண்டும் என்று திருவுள்ளங்கொண்டு தமது திருவுள்ளக்கிடக்கையை வட்டமேஜை மாநாடு என்ற தலைப்பில் ஞானசம்பந்தம் துணைமலராகிய அறிவுரைப் பூம்பொழிலில் திகழச் செய்ததை நேயர்கள் அறிவார்கள். அங்ஙனம் எழுத்தில் இருந்த எண்ணத்தைச் செயல் முறையில் தெரிவிக்க அடுத்த அடுத்த ஆண்டுகளில் ஸ்ரீலஸ்ரீ துறைசையாதீன மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், ஹரித்துவார் சுவாமி சிவானந்தர் அவர்கள், யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள், மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் அவர்கள், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள், மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள், காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள், முதலிய மதஸ்தாபனத் தலைவர்களுடன் அளவளாவி ஆவனசெய்து வருவதை உலகம் நன்கு அறியும். அதுபோலவே இந்த ஆண்டு இந்த மாதத்தில் குன்றக்குடி மயூரகிரிப்பெருமானை வழிபடச் சென்றவர்கள் அங்கு குன்றக்குடி ஆதீனத்தில் எழுந்தருளி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகளோடும்

பெருங்குளம் செங்கோல் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகசுந்தர சத்தியஞான பண்டாரசந்நிதி அவர்களோடும் அளவளாவித் தருமைக்கு எழுந்தருளினார்கள். 5—4—54ல் வேளூர் என்னும் அங்காரக க்ஷேத்திரத்தில் திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளினார்கள்; அவர்களை வரவேற்று உபசரித்தார்கள்.

இங்ஙனமே வைஷ்ணவ மாத்வ மடாதிபதிகளும் இவர்களும் ஒருமிக்க இருந்து சமயவாழ்விற்கான அடிப்படைத் திட்டங்களை அமைக்கும் காலம் அண்மையில் ஏற்படப் போவதைத் திருவருள் குறிப்பால் சமயசீலர்கள் ஒவ்வொருவரும் உணர்வார்கள். அத்தகையநாள் கடவுள் உணர்ச்சியாகிற மரத்திற்கு களைபிடுங்கி கொத்திஎருவிட்டு நீர்பாய்ச்சும் இன்பநாளாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வளர்க சமயநெறி !

---

## ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் பிரதம சிஷ்யர்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமிகள் அவர்கள் தபோநிஷ்டராக தமிழ்நாட்டில் ஈசுவர பக்தியை தமது உபன்யாசங்கள் மூலமாகவும் உபதேசங்கள் மூலமாகவும் திருவெம்பாவை திருப்பாவை மாநாடுகள் வாயிலாகவும் பரப்பி வருவதை உலகம் நன்கு அறியும். அவர்கள் சற்றேறக்குறைய பல ஆண்டுகளாக சந்திரமௌளீஸ்வரரை பூஜித்து வந்தமையால் நாடும் உய்ந்தது. நல்லனவும் விளைந்தன. தமக்குப்பின் ஜயேந்த்ரஸரஸ்வதீ சுவாமிகளை பிரதம சிஷ்யராக ஏற்றுக்கொண்டது மிகமகிழ்ச்சிதருவதாகும். புதிதாக வந்தவர்கள் வேதசாஸ்திரங்களில் முறையாகப் படித்துத் தேர்ந்தவர்கள். சாந்தமும் தகுதியும் உடையவர்கள். தமது குருநாதர் சென்ற வழியிலேயே சமய பரிபாலனம் செய்து வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

---

# தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் குன்றக்குடி விஜயம்

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்க குன்றக்குடி மடாலய முகப்பில் அலங்காரக் காவணம் இடப்பெற்றிருந்தது. வீதிகளெல்லாம் மகர தோரணங்களாலும் வாழைகளாலும் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தன. காலை 7 மணிக்கே நகர தனவைசியப் பிரமுகர்களும் பக்தகோடிகளும் திரளாகக் கூடியிருந்தனர், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் காலை 10 மணி அளவில் பரிவாரங்களுடன் குன்றக்குடிக்கு எழுந்தருளியானுர்கள். $10\frac{1}{2}$ மணிக்கு குடை, கொடி, ஆலவட்டம் முதலிய விருது களுடன் பிரமுகர்கள் எதிர்கொண்டழைக்கச் சென்றனர். மடாலய முகப்புக்கு வந்ததும் அருட்கடலும் அன்புசெறி கடலும்போல இரண்டு மகாசந்நிதானங்களும் சந்தித்துக் கொண்டார்கள்.

## பிரியாமற் பிரிந்தவர்கள் கூடினல் பேசவும் வேண்டுமோ.

யாருக்கும் கிடைக்காத பெரிய திருவருள் வாய்ப்பு தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குக் கிட்டியிருக் கிறது. வரலாற்று ஏட்டிலேயே தம் கண்ணெதிரே தமக்குச் சிஷ்யபாவத்திலுள்ள ஒருவரை மகாசந்நிதானமாகப்பார்ப்பது முடியாதகாரியம். அப்படியிருக்க குருசிஷ்ய முறையிலிருந்து பிரிந்தவர்கள் இன்று மகாசந்நிதானமாகவே மடாலய முகப்பில் வரவேற்றூர்கள். பொன்னுடை போர்த்தினுர்கள். குன்றக்குடி ஆதீன அடியார்கள் அனைவரும் வணங்கித் திருநீற்றுப் பிரசாதம் பெற்றுய்ந்தனர். ஏனைய பிரமுகர் களும் அப்படியே.

## வரவேற்பு

தருமை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் பொன்னுடை போர்த்தி

ஞர்கள். குன்றக்குடி ஆன்மார்த்த மூர்த்தியாகிய காளத்தி நாதருக்கு நடைபெற்ற விசேஷ தீபாராதனையை வணங்கி கொலு மண்டபத்துக்கு எழுந்தருளியானுர்கள். பெருங் கூட்டம். ஆதீன ஓதுவார் ஆவுடையப்ப தேசிகர் அவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடினுர்கள். திரு. வி. க. புண்ணிய விடுதி மாணவிகள் வரவேற்புப் பாடல்கள் பாடினர். அருள் நெறித் திருக்கூட்டச் செயலாளர் சா. கணேசன் அவர்கள் வரவேற்புப் பத்திரம் ஒன்றை வாசித்தளித்தார்.

திருவண்ணுமலை ஆதீனத் திருக்கூட்டத்தினரின் சார்பாக ஸ்ரீமத் சபாபதித் தம்பிரானும், தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டத்தினர் சார்பில் வித்துவான் திரு. வை. சு. தண்ட பாணியும், தமிழ்நாடு ஆலய தர்மகர்த்தாக்கள் சங்கச்சார்பில், தமிழ்வள்ளல் திரு. உ. ராம. சேவு. மெ. மெய்யப்பச் செட்டி யாரும், தமிழ்நாடு உயர்நிலைப் பள்ளிகள் கழகம் சார்பில் திரு. நா. அ. நாகப்பச்செட்டியாரும், தமிழ்நாடு மாணவர் அருள்நெறி மன்றம் சார்பாக திரு. சுப. வரதராசனும், தமிழ்நாடு அரிசன நல உரிமைச்சங்கம் சார்பாக திரு. பழ. முத்தய்யாவும், தமிழ் நாடு மாதர் அருள்நெறி இயக்கம் சார்பாக திருமதி புஷ்பம் நடராசனும் வரவேற்பிதழ்களைப் படித்துக் கொடுத்தார்கள். குன்றக்குடி, காரைக்குடி, தூத்துக்குடி, திருச்சி, மதுரை, ராமநாதபுரம் மாவட்டம், மற்றும் பல ஊர்களிலிருந்தும் அருள் நெறித் திருக்கூட்டங்கள் சார்பாகவும் மாலைகள் அணிவிக்கப் பெற்றன.

## மீனுட்சிசுந்தரனுர் அவர்கள்

தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டப் பிரசாரக் குழுத் தலைவர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பேசு கையில், சைவத்துக்கும் தமிழுக்கும் இழுக்கேற்பட்ட காலத்து இந்த இருபதாம் நூற்றுண்டில் அவற்றைக்காத்த பெருமை தருமபுர ஆதீனத்தைச் சார்ந்ததென்றும், தமிழையும், சைவத் தையும் காக்க குன்றக்குடி அடிகளாரை உருவகப்படுத்திக் கொடுத்தது தருமபுர ஆதீனம்தான் என்றும் கூறினுர். மேலும் பேசுகையில் அரசியல் பொருளாதாரத் துறைகளில் தலைவர்கள் தோன்றி அன்பு அகிம்சா நெறியில் அரும்பணியாற்றி நாட்டை

உய்வித்தனர் என்றும், ஆகவே அருள்நெறி அறநெறியில் இவ்விரு ஆதீனகர்த்தர்கள் வழிகாட்டவேண்டுமென ஏராள மான தொண்டர்கள் எதிர்நோக்கி நிற்கிறார்களென்றும் கூறினார்.

## தருமை, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளுரை ஆற்றுகையில், அன்று பாண்டிய நாட்டில், சமணர்கள் இருந்து சைவத் திற்கு இழுக்கு ஏற்பட்ட காலத்து அவ்விழுக்கையகற்ற சோழ நாட்டினின்றும் ஞானசம்பந்தர் வந்தார். பாண்டிய நாட்டில் சைவசமயம் தழைத்தோங்க வேண்டுமென சோழநாட்டின் கண் ஓர் குழந்தை அழுது பால் உண்டு வளர்ந்தது என்பது சோழநாட்டிற்குப் பெருமை. இது போன்ற குழந்தை ஒன்று எங்கள் ஆதீனத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டு இந்த ஆதீனத்திற்கு வேண்டுமெனக் கேட்டார்கள். கொடுத்தோம். அரசுவேறு மதம்வேறு என்ற இப்போதுள்ள அமைப்பு அன்று இல்லை. அன்று மாணிக்கவாசகரும், சேக்கிழாரும், முதலமைச்சர்களாக இருந்துகொண்டே சமயத்திற்குத் தொண் டாற்றினர், அரசாங்கம் அருள்நெறியுடன் இயங்கவேண்டியது அவசியம். இந்த அருள்நெறிப் பணியை இயற்றி மக்களிடை தெய்வ நம்பிக்கையேற்பட அருள்நெறித் திருக்கூட்டத்தினர்க் குத் தூய்மை உள்ளம் வேண்டுமென்று கூறினார்கள்.

## குன்றக்குடி, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அருளுரை ஆற்றுகையில் கலை மணமும், தமிழ் மணமும் சிறந்தோங்க வேண்டுமென்பதே தமிழ் நாட்டின் இலட்சிய வாழ்வு. அல்லல்களினின்றும் தமிழ் நாடு மீட்சியுற ஆண்டவனை நினைத்தல் வேண்டும். இது சரித்திரம் காட்டும் படிப்பினை. கடந்த ஐந்தாண்டுகளாக இப்பகுதி வான்மழையின்றி வாடிக்கிடந்தது. இவ்வாண்டு நல்ல மழை பொழிந்து, செழிப்பு ஏற்பட்டுள்ளது. இது அருள் நெறித் திருக்கூட்டத்தினரின் தொண்டின் பயனே என்றால்

அது மிகையாகாது. அருள்நெறி இயக்கம் வளர்ந்து பதினாயிரம் பேர்கள்வரை தொண்டர்கள் பல துறைகளினின்றும் சேர்ந்து சேவை செய்து வருகின்றனர். தமிழ்நாட்டில் சைவமும், தமிழும் மீண்டும் தழைத்துத் தமிழ்நாடு எல்லாத்துறைகளிலும் சிறந்து உலக அரங்கில் ஓங்கச் செய்யவேண்டும். தருமை ஆதீனகர்த்தரின் வருகையில் மீண்டுமொரு புத்துணர்ச்சி பெறலாம் என்று கூறினார்கள்.

## நன்கொடை

தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டத்திற்கு அருள்நெறி இயக்கத்திற்காக ரூ. 1001 நன்கொடை தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கியதைப் பாராட்டி திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பேசினார்கள். செயலாளர், திரு. சா கணேசன் அவர்கள் நன்றி கூறினார்.

## மாகேஸ்வரபூஜை

ஆயிரக்கணக்கான அடியார் பெருமக்களுக்கும், வந்திருந்த பெருமக்களுக்கும் சைவசார முறைப்படி மாகேஸ்வரபூஜை சிறப்பாக நடத்தி வைக்கப்பெற்றது. ஆதீன அடியார்களும் காரியஸ்தர்களும் ஒவ்வொரு சின்ன காரியங்களையும் நேரில் கவனித்துக் கொண்டமை மிகமிகப் பாராட்டற்குரியது.

இரவு 7 மணி சுமாருக்கு இரண்டு மகா சந்நிதானங்களும் மயூராசல வள்ளலை வணங்க எழுந்தருளினார்கள். தோகையடிப் பிள்ளையார் கோயிலை முதலில் வழிபட்டுக்கொண்டு சிவலிங்கப் பெருமானையும் அம்மையையும்வணங்கி அங்குள்ள குடை கோயிற் சிற்பங்கள் அனைத்தையும் கண்டு மகிழ்ந்தார்கள். பின்னர் மலையின்மேல் ஏறி மயூரகிரிப் பெருமானை வலம்வந்து திருமுன் நின்றார்கள். பங்குனி உத்திரத் திருநாட்காலமாதலின் கந்தன் கருணைப் பிரவாகத்தில் நீந்திக்கொண்டிருக்கின்ற ஜனப்பிரவாகத்தினிடையே அருட்குரு மூர்த்திகள் இருவரும் கந்தன் கருணையைத் தாங்கள் ஏற்று மக்கள் அனைவர்க்கும் பயின்று வழங்க நின்றிருந்த காட்சி பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென நோயுண் மருந்து தாயுண்டது

போலவும் பேரொளிப் பிழம்பினனாகிய கந்தன் கருணையை முழுதும் ஏற்க ஆன்மாக்களுக்கு ஆற்றல் இல்லாததை அறிந்து முருகனே இரு மகா சந்நிதானங்களாக மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி நிற்றல்போலவும் இருந்தது. தருமை ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் மகாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். மூச்சுவிட இடமில்லாமல் பாலிலும், தேனிலும், பன்னீரிலும் இள நீரிலும், எலுமிச்சம்பழத்திலும் எல்லாவற்றுக்கும் மேலாக அன்பர்களின் ஆனந்தக் கண்ணீரிலும் இடைவிடாது முழுகித் திளைத்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமானுக்கு இவர்களுடைய மகாபிஷேகத்தையும் ஷண்முகார்ச்சனையையும் வழிபாட்டையும் முடித்துக் கொள்ளுகின்றவரையிலாவது அவகாசம் கிடைத்தமையால் முருகனுக்கு ஓரே ஆனந்தம். இதில் பொன்செய் மேனியர் புதல்வராகிய முருகனும் பொற் கவசம் தாங்கி பொன்செய் மேனியராகவே காட்சியளித்தார். ஷண்முகார்ச்சனை முடிவில் ஆறு கர்ப்பூர ஆரத்திகள்நடந்தன. கர்ப்பூரப்புகை அவ்வளவும் இறைவன் திருமேனியைச் சூழ்ந்தது. அந்தநிலை சூரபன்மன் இந்திரனாகிய மயில் வாகனத்தில் எழுந்தருளியிருக்கிற முருகனை மேகமண்டலமாக மறைத்த காட்சியையும் முருகன் தமது தெய்வஞான ஒளியோடு மறைப்பிலிருந்து விளங்குகிற காட்சியையும் காண்போர் நினைவிற்குக் கொண்டுவந்தன. குன்றக்குடி விஜயத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடைந்த ஆனந்தங்களில் ஈடும் எடுப்புமற்ற உயர்ந்த ஆனந்தம் முருகப் பெருமானுடைய தரிசனம்.

## மறுநாள்

காலை 9 மணி அளவில் எழுந்தருளி மணிவாசகப் பெருமானுக்கு ஞானம்நல்கிய ஸ்தலமாகிய மரகதக்கூத்தர் எழுந்தருளியிருக்கின்ற திரு உத்தரகோசமங்கையை அடைந்தார்கள். ராஜஸ்ரீ காசிநாததுரை அவர்களும் தேவஸ்தான அதிகாரிகளும், ஆலய நிர்வாகிகளும், இராமநாதபுரத்துப் பிரமுகர்களும் இரண்டு மகா சந்நிதானங்களையும் தக்க

மரியாதைகளுடன் வரவேற்றார்கள். மங்களநாயகி சமேத உத்தரகோசமங்கை நாதரை வழிபட்டார்கள்.

சுவாமி சந்நிதியில் நீத்தல் விண்ணப்பம் முழுதும் பாராயணம் செய்யப்பெற்றது. பட்டு பரிவட்டங்கள் சாத்தப் பெற்றன. பரவசப்பட்டு இரண்டு மகா சந்நிதானங்களுமே பாராயணம் செய்தமை அன்பர்கள் அனைவருக்கும் விழிப்பையும் கனிவையும் உண்டாக்கிவிட்டது. சீதப்புனல், இலந்தையடி, இவற்றை வழிபட்டுக்கொண்டு மகேஸ்வரபூஜைக்கு குன்றக்குடிக்கு எழுந்தருளினார்கள்.

## அன்று மாலை ஐந்து மணிக்குமேல்

மாணிக்கவாசகர் அவதரித்த திருவாதவூரை வழிபட எண்ணி வழிக்கொண்டார்கள். இரவு 9 மணிக்கு திருவாதவூரை அடைந்து விசேஷ அர்ச்சனை ஆராதனைகளுடன் வழிபட்டார்கள். இரவு 10 மணி அளவில் தமது ஆத்மார்த்த மூர்த்தியாகிய அங்கயற்கண்ணி சமேத சொக்கலிங்கப் பெருமானை வழிபட எழுந்தருளினார்கள். பொற்றாமரை ஈசான்ய பாகத்திலிருந்து குருஞானசம்பந்தப் பெருமானின் அனுபவங்களைத் தியானித்த வண்ணமே வழிபாட்டைத் தொடங்கினார்கள். சத்தியாய்ச் சிவமாகித்தனிப்பரமுத்தியான முதலை முறையே வழிபட்டார்கள். குன்றக்குடிக்கு எழுந்தருளினார்கள்.

## மூன்றும்நாட் காலை

காலை 7 மணிக்கெல்லாம் பெருங்குளம் செங்கோல்மடம் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகசுந்தர சத்தியஞான பண்டாரசந்நிதிகள்** அவர்கள் குன்றக்குடிக்கு எழுந்தருளினார்கள். தக்கமுறையில் வரவேற்புநடந்தது. மூன்று மகா சந்நிதானங்களுமாக இருந்து அளவளாவி சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் எதிர் காலத்தின் சிறப்பும்பற்றி உரையாடி மகிழ்ந்தார்கள். மணி 9 ஆயிற்று. காரைக்குடி கம்பர் கழகச்செயலர் சா. கணேசன் அவர்களின் விசேஷ அழைப்பின்பேரில் மூன்று மகா சந்நிதானங்களும் கம்பர் கழகத்துக்கு எழுந்தருளியானார்கள்

# காரைக்குடியில் கம்பன் திருநாள்

## குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் தொடக்கவுரை

விழாவைத் தொடங்கிவைத்த குன்றக்குடி தெய்வசிகாமணி அருணுசலதேசிக பரமாசாரிய சுவாமிகள் உரையாற்றுகையில் பல ஆண்டுகளாகக் கம்பனின் கவி அமுதுபற்றிப்பேசி நாத்தழும் பேறியிருக்க கம்பனின் கவிச்செல்வம் ஆராத இன்பம் பயப்ப தாக இன்றும் இருக்கிறது. இதற்கு ஈழம் முதலான இடங்களி லிருந்து பிரதிநிதிகள் வந்து கூடியிருப்பதே எடுத்துக்காட்டு ஆகும். இன்று கம்பன்விழாவில் மூன்று சைவப்பிரதிநிதிகள் விஜயம்செய்து பாராட்டுவது கம்பன் புகழுக்கு சைவர் துணையா யிருப்பது தெளிவு. கிறிஸ்தவப்பெரியார் ஸ்ரீ பால்நாடார் வந்து கலந்துகொள்வதும் இஸ்லாமியர் கிருஸ்துவர் ஆகியோரின் ஆதரவும் கம்பன் விழாவிற்கு இருந்துவருவதும் காரைக்குடி கம்பன் கழகத்தாரின் பெருஞ்சாதனையென்று ஸ்ரீலஸ்ரீ குன்றக் குடி அடிகளார் ஸ்ரீ சா. கணேசனின் ஆற்றலைப் பாராட்டினுர் கள். மேலும் அவர்கள் பேசுகையில் மனப்பண்பைக்காட்டும் தமிழகத்தில் கம்பன் பிறந்து வாழ்ந்தான். தமிழ்ப்பெருமக்கள் முடியரசைநம்பித்தான் வாழ்ந்தார்கள். முடியரசில் குடியரசைக் கண்டார்கள். கம்பனது காவியத்தில் குலத்திற்கு ஏற்றம் கொடுக்கப்படுகிறது. தமிழில் சாதி என்ற சொல் கிடையாது. தீயகுலத்தில் நல்லன பிறக்க முடியுமென கம்பன் நினைக்கவும் நம்பவும் செய்கின்றுன். ராமனது குலத்தில் கைகேயி தவருக நடித்தும் ராமனுக்கு மகுடம் எனப்பாடிவிடுகிருள். கூனி கைகேயிக்குச் சொல்வதன் மூலம் அழுக்காறு பிறக்காதென் றும் இராவணனது குலத்தில் நல்ல குணமுள்ள திரிசடை பிறக்க முடியுமென்றும் கம்பன் காட்டுகின்றுன். இதனுல் மூவுலகமும் வாழ முடியுமென்பது கம்பன் ஆசை. அரச பண்பாடு இராமனிடம் ஊறிக்கிடக்கின்றது. இல்தோறும் நுழைந்து மக்கள் நலனைக் கருதும் மணிமகுட தத்துவத்தை மக்கள் பெறுகிருர்களென கம்பன் எடுத்துக் காட்டுகிருன்.

இன்று சமுதாயத்தில் நல்லெண்ண உணர்ச்சி பரவ வில்லை. உலக குடும்ப உணர்ச்சியால் பயம் அகலும். கம்பன் அறிஞன்; கவிச்சக்கரவர்த்தி. வாழ்க்கை முறையைப் பல

இடங்களில் சுட்டிக்காட்டுகிறான். இதில் கற்பனையும் புனைந்துரையும் எழலாம். கதைப்போக்கில் கவிதைச் சுவையில் தமிழ்நாடு வாழக்காட்டுகிறான். மனிதசமுதாயம் ஒரு எல்லையில் வாழ எடுத்துக் காட்டுகிறான். உலகம் அனுபவிக்க தன்னை ஆயிரக்கணக்கான கவிகளாக உருவகப்படுத்திக் கொள்கிறான். லட்சிய கவிஞனான கம்பன் நாட்டை வாழ்விக்க இராமனிடம் பண்புவைத்து திருவள்ளுவரும்போகாத சட்டநுணுக்கங்களை உலகறியக் கொடுத்திருக்கிறான். வள்ளுவரின் வெறும் சட்டம் நாமறிவதற்குச் சங்கடம். கம்பனிடத்துள்ள விசேஷம் இது தான். விஞ்ஞானம் தமிழ்நாட்டில் இல்லாதது அல்லவென்று கம்பன் வள்ளுவன் கூறும் கோட்பாடுகளைக் காட்டி இக்காலத்து விஞ்ஞானிகள் எடுத்துக்கூறவேண்டும்'' என்று கூறினார்கள்.

## தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் வாழ்த்துரை

பின்னர் தருமபுர ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை கூறுகையில், ''கம்பராமாயணத்திற்குச் சைவர்கள் ஆதரவு இருக்கிறதா என்ற சந்தேகத்துக்கு இடமில்லையென்றும் கம்பராமாயணத்திற்கும் ஆதீனங்களுக்கும் தொடர்பு உண்டு என்றும் குமரகுருபரர் காசிக்குச் சென்று அங்கேயும் கம்பராமாயணத்தைப் பரப்பியுள்ளாரென்றும், உலகமக்கட்கு தினந்தோறும் வேண்டிய சாதனங்களே கம்பராமாயணத்தில் காட்டப்படுகிறதென்றும்'' சொன்னார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் டாக்டர் கிருஷ்ணன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பெற்றது.

## செங்கோலாதீனகர்த்தரவர்களின் ஆசியுரை

பெருங்குளம் செங்கோல் மடம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சுந்தர சத்தியஞான பண்டாரசந்நிதிகள் தமது ஆசியுரையில் கம்பன் திருநாளில் கலந்துகொள்வது கிடைத்தற்கரிய பேறு என்றும் கம்பராமாயணத்தின் இலக்கியம் சொற்சுவை இவற்றை ரசிகமணி டி. கே. சி. யிடம் கேட்டு ரசித்ததாகவும் அன்றுடன் தமக்கு இதுசம்பந்தமாக ஈடுபாடு அதிகமென்றும் இந்த விழாவினால் கம்பன் புகழ் மென்மேலும் வளருமென்றும்'' கூறினார்கள்.

375



மாலை 4 மணிக்குமேல் பாரிபறம்பாகிய பிரான்மலை சதுர்வேதிமங்கலம் திருப்பத்தூர் முதலிய குன்றக்குடி ஆதீனத்துக்குட்பட்ட தலங்கள் வழிபடப்பெற்றன. அங்கங்கும் விசேஷ வரவேற்புக்களும் மாலை மரியாதைகளும் அருணெறிக் கழகங்களின் சார்பில் நிகழ்த்துவிக்கப் பெற்றன.

## திருப்பத்தூரில்

நகர அருள்நெறித் திருக்கூட்டத் தலைவரும் வழக்கறிஞரு மான திரு. ஏ. இராமச்சந்திரம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தி ஞர்கள். ஆதீனத்தலைவர்கள் மூவருக்கும் அருள்நெறித் திருக் கூட்டத்தினரால் வரவேற்பிதழ்கள் படித்து அளிக்கப்பட்டன.

முதலில் ஈரோடு திரு. மீனாட்சி சுந்தரனார் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றினார். அதன்பின்னர் மூன்று தமிழ் ஆதீனத் தலைவர்களும் வாழ்த்துரை நல்கிப் பேசுகையில் அருள்நெறித் திருக்கூட்டத்தினரும் பொதுமக்களும் அன்போடு வரவேற்றுப் பாராட்டியதற்கு நன்றிகூறி தமிழ் சைவம் இவற்றின் சிறப் பைப்பற்றியும், எல்லா மதக் கருத்துகளும் சைவமதத்தினுள் அடங்கியுள்ளன என்றும் தமிழ்நாட்டிலுள்ள மடங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து தமிழும் சைவமும் மீண்டும் தழைக்கப் பாடுபட வேண்டுமென்றும், அருளாட்சியைத் தமிழகம் பெற வேண்டுமென்றும் குறிப்பிட்டனர்.

## நன்கொடை

இவ்வூர் ஹரிஜனவிடுதி மாணவர்கள் திருமுறை பயில்வதற் காகத் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நூறு ரூபாய் நன்கொடை யளித்தார்கள். நகர அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளர் திரு. சு. மகாலிங்கம் நன்றி நவின்ற பின், கூட்டம் இனிது முடிவுற்றது.

குன்றக்குடி விஜயத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் 15—3—54 அன்று முதல் 17—3—54 வரை மூன்று நாட்கள் பல தலங்களுக்கும் சென்று தரிசித்து 17—3—54 அன்று இரவு தருமபுரத்துக்கு எழுந்தருளியானார்கள்.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

# வேலூர் விஜயம்

5—4—54 திங்கள் அன்று திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஜன்மநக்ஷத்திரப் பெருவிழா. துறைசை யாதீனத்தின் ஆத்மார்த்த மூர்த்தி ஸ்ரீ வைத்யநாதர். ஆத்மார்த்த மூர்த்தியின் தலத்திலேயே இத்திருநாள் கொண்டாடவேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுளக் குறிப்பு. அன்று காலை 10 மணிக்கு வேலூருக்கு எழுந்தருளுவதாக முன்னர் அறிவித்தருளினார்கள்.

## முன்னேற்பாடு:

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தக்கமுறையில் வரவேற்று உபசரிக்கவேண்டும் என தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் விரிந்த மனத்துடன் பெருவிருப்போடு அதற்கு ஆவனசெய்ய ஆணைவழங்கினார்கள். அழைப்பிதழ்கள் தயாராயின. வரவேற்புரைகள் எல்லாம் . விரைவில் அச்சடிக்கப்பெற்று நிறைவெய்தின. வேலூரில், வரவேற்புப்பந்தல் முதலிய எல்லாம் போடப்பெற்று முடிந்தன. பொன்னெழுத்துக்கள் பொறித்த வரவேற்பு வளைவுத் தட்டிகள் தன் புன்னகைகாட்டி வரவேற்புகூறத் தொடங்கின. விழாத் தோரணங்கள் பந்தலின் மேல்முகடுகளை அலங்காரம் செய்தன. இப்படியாக 3-நாள் முதலே முன்னேற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்றது.

## வரவேற்பு:

5—4—54 காலை மணி 6க்கு வேலூர், மக்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்தது. பக்தி வெள்ளத்திலே எதிர் நீச்சல்

போட்டு உலவினார்கள் இளைஞர்கள். வளைவுத் தட்டிகளும் மகுட தோரணங்களும் மங்கலமானதொரு நிகழ்ச்சியை முன்னறிவித்துக் கொண்டிருந்தன. வீதிகள்தோறும் விழாத் தோரணங்கள் வீடுகள்தோறும் பூர்ணகும்பங்கள்.

காலை மணி 8 வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து தெற்கே உள்ள கற்சாலையில் ஒருமைலளவு ஒரே ஜனத்திரள். உந்தூர்திகள் தடைப்பட்டன. ஓடிவரும் வண்டிகளெல்லாம் ஓட்டம் தடைப்பட்டு நின்றன.

## எதற்கு ?

அன்று அப்பரடிகளை வரவேற்றதாகச் - சம்பந்தரை வரவேற்றதாகச் - சுந்தரரை வரவேற்றதாகச் சொன்ன புராணங்களில் அன்று காலைவரை நம்பிக்கையில்லாதவர் இன்று அத்தகைய எண்ணத்தை மாற்றிக்கொண்டார்கள்.

ஏன்? காலப்போக்கிலே சமயம் எங்கே அழிந்துவிடுமோ என்று சஞ்சலப்படும் சமய வாதிகளுக்குக்கூட இன்றைய நிகழ்ச்சி அத்தகையதொரு மனத்தை மாற்றியிருக்கத்தான் வேண்டும்?

காலை மணி 10 வேனிலின் வெம்மையைப் பொருட்படுத்தாது வெள்ளம்போன்று மக்கள் கூடியிருந்தனர். எடுபிடிகளும் குடைகளும் இரண்டு யானைகளும் நீண்டதூரம்வரை நின்றுகொண்டிருந்தன. வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் ஏனைய அடியார்களும் வரவேற்புக்கு தயாராக இருந்தார்கள். தருமையாதீனத்திலிருந்து வந்த காரியஸ்தர்களனைவரும் கண்ணும் கருத்துமாக ஏற்பாடுகளில் முனைந்திருந்தனர். திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் குறித்தநேரத்தில் எழுந்தருளினார்கள். வரவேற்புக் கொட்டகையிலிருந்து சிறிது தூரத்துக்கு முன்னிருந்தே தருமபுர ஆதீனம் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் ரோவர்குரு சாரணர்கள் வணக்கம் செலுத்தி வரவேற்று வந்தனர்.

வரவேற்புப் பந்தலில் கட்டளை சுவாமிகள் அவர்கள் மகா சந்நிதானம் அவர்களுக்குமாலைசூட்டி வரவேற்றார்கள். புகைப் படச்சுருள் சுற்றியவண்ணம் இருந்தது. தருமபுரம் மீனாட்சி அவர்களும் மாயூரம் N. ராமகிருஷ்ணன் அவர்களும் புகைப் படம் எடுப்பதில் முனைந்திருந்தனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சில நிமிஷங்கள் ஓய்வெடுத்துக்கொண்டு நாற்காலி சவாரியில் எழுந்தருளி வழிக்கொண்டார்கள்.

## வழிநடையில் :

தருமபுர ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்கள் திருமுறைகளை ஓதிக்கொண்டும், வேலூர் அநாதைக் குழந்தைகள் விடுதி மாணவ மாணவிகள் சிவபுராணப் பாராயணத்துடனும் இருபுறமும் வந்துகொண்டிருந்தார்கள். நாதசுர நல்லிசைவாணர்களுடனும், பியாண்டு வாத்தியங் களுடனும் நகர்ந்து கொண்டிருந்தது சவாரி. வீதிகளில் மஞ்சள் நீராரத்திகளின் மங்கலத் தட்டுக்கள் வெண் பொற் காசுகளின் ஓசைகளோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவீதிவலமாக கட்டளை மடத்துக்கு எழுந்தருளினார்கள். பக்திப் பிரவாகத்திலே பரவசமடைந்த மக்கள் கூட்டங்களோடு துறைசை மகா சந்நிதானம் அவர்கள் காலை 11 மணிக்கெல்லாம் கட்டளை மடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

## இருகுருமணிகளும் :

துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் ஒன்றுகூடி சமயப் புரட்சியை விளைவித்துப் பல ஆண்டுகளாயின. இன்றும் இருசமயத்தலைவர்கள் ஒன்றுகூடும்பொழுது ஒரு புதுமை விளையத்தான் செய்கிறது. கட்டளை மடத்தில் தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் துறைசை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மாலைசூட்டி வரவேற்றார்கள். துறைசை மகா சந்நிதானம் அவர்களும் தருமை மகாசந்நிதானத்துக்கு பொன்னாடை போர்த்தி மாலையணிவித்தார்கள், இரு குரு மணிகளும் கட்டளைமடத்தில் கொலுக்காட்சிக்கு எழுந்தருளி னார்கள்.

## கொலுக்காட்சி:

ஞானியர்களுடைய நடைமுறை மக்களுக்கு அறிவுத் திறவுகோலாக இருப்பது. இரண்டு குருமகாசந்நிதானங்களும் இருகண்கள் என, இரு அருட்பெருங் கடல்களென வீற்றிருந்து சிவோகம்பாவனையை ஓதாதுணர்த்தியருளினார்கள். கட்டளை சுவாமிகளால் தீபாராதனைசெய்து முடிந்ததும், முறையே அடியார்களும் மக்களும் வணங்கி திருநீறு பெற்றுய்ந்தார்கள்.

## வரவேற்புரை :

துறைசை மகாசந்நிதானம் அவர்களுக்கு வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் வரவேற்புரை வாசித்தளிக்கப்பெற்றது. வரவேற்புரை வெள்ளித்தகட்டினால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. பின்னர் அனாதைக்குழந்தைகள் விடுதி மாணவ மாணவியர் சார்பில் வரவேற்புரை வழங்கப்பெற்றது.

கிராமவாசிகள் சார்பில் பஞ்சாயத்து போர்டு நிர்வாகி அவர்கள் ஒரு வரவேற்புரையை வாசித்து அளித்தார்கள்.

## கும்மி கோலாட்டம்:

வேளூர் தேவஸ்தானம் தேவாரவகுப்பு ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களால் இரு குரு மகா சந்நிதானங்கள்மீது பாடப்பெற்று பதிப்பிக்கப் பெற்றிருந்த கும்மிப் பாடல்களும் கோலாட்டப் பாடல்களும் தேவார வகுப்பு மாணவியர்களாலும், அநாதைவிடுதி மாணவிகளாலும் பாடியாடிக் காண்பிக்கப்பெற்றது. பின்னர் வரவேற்புக் கீர்த்தனங்கள் குழந்தைகளால் பாடப்பெற்றன.

## வெளியீடுகள் :

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஜன்ம நக்ஷத்திர விழாவெளியீடாக 'கண்கட்டி மறைஞானசம்பந்தர் நூல்கள்' என்றவெளியீடு வெளியிடப்

பெற்று அன்பர்கட்கு வழங்கப்பெற்றது பின்னர் காசிமடம் ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஸ்ரீ சாமிநாத சுவாமிகள் நினைவு நூலாக வெளியிடப்பெற்ற திருவாசகப் பழமொழிகள் என்ற நூல் விமர்சனம் செய்யப் பெற்று வெளியிடப்பெற்றது. இந்நூல்களின் அரிய பெரிய கருத்துக்களை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் கூறப்பெற்றது. பின்னர் தருமபுரம் ஆதீனம் குருஞான சம்பந்தர் ரோவர்குரு சாரணர்கள் மகாசந்நிதானங்களுக்கு உரையாலும் பாட்டாலும் வணக்கம் தெரிவித்துக்கொண் டார்கள். இவ்விடை நிகழ்ச்சிகளுக்குப் பின் இரு மகா சந்நிதானங்களும் ஓய்வுக்குச் சென்றார்கள்.

## மகாபிஷேகம் :

துறையாதீனத்தின் ஆத்மார்த்த மூர்த்தியாக விளங்கு பவர் ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான். பட்டமேற்று முதன் முறை வேளூருக்கு விஜயம் செய்யும் துறைசை மகாசந்நி தானங்கள் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகள் செய் விப்பது மரபு.

உச்சிக்காலத்தில் அபிஷேக உபகரணப் பொருள்கள் ஏராளமாக இருந்தன. பால் குடங்கள் பல மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தன. பன்னிரண்டடி நீளமுள்ள கரும்புகள் நூற்றெட்டு. இவ்விதமாகவே எல்லாப் பொருள்களும். அபிஷேகம் நடந்து முடிய மணி ஒன்றாயிற்று.

## மணி 1. உச்சிக்கால வழிபாடு:

துறைசை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சித்தா மிர்தத் துறையில் விதிப்படி நீராடி வழிபாட்டுக்கு எழுந் தருளினார்கள். கள்ளவாரணப்பிள்ளையார் முதல் அங்காரகன் வேம்படிமால்வரை வழிபாடுகள் அனைத்தும் முடிந்தன. கூட்டுப் பிரார்த்தனையாகவே அமைந்தது இவ்வழிபாட்டுக் காட்சி.

## மாகேசுவர பூஜை:

மத்தியானம் வந்திருந்த பெருமக்களனைவர்க்கும் மாகேசுவர பூஜை செய்விக்கப்பெற்றது. 27 அறுசுவைப் பொருள்கள் அடங்கிய உணவுப் பட்டியலும் அன்பர்கட்கு அச்சிட்டு வழங்கப்பெற்றிருந்தது. மாகேசுவர பூஜைக்குப் பின் மக்கள் உண்ட களைப்புத்தீர ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

## இரவு வழிபாடு:

மாலை 5 மணி முதலே அர்ச்சனைகளுக்கு வேண்டிய புஷ்பங்கள், வில்வங்கள், தேங்காய்கள், பழங்கள், பாக்கு, வெற்றிலைகள் இவைகளை எடுத்துத் தயார் செய்ய முனைந்தனர் கோயில் உட்காரியம் பார்ப்போர். ஸ்ரீ வைத்திய நாதருக்குப் பஞ்சமுகார்ச்சனை, ஸ்ரீ தையல்நாயகிக்கு நவசத்தி அர்ச்சனை, ஸ்ரீ செல்வமுத்துகுமாரருக்கு ஷண்முகார்ச்சனை, ஸ்ரீ ஆறுமுககுமாரருக்கு ஷண்முகார்ச்சனை மற்ற அங்காரகன் போன்ற ஸ்தல தெய்வங்களுக்கும் விசேஷ அர்ச்சனைகள் இப்படியாக அர்ச்சனைகள் செய்யப்பெற்று முடிந்தன.

துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் சந்நிதிகளின் திருமுன்பு உளமுருகி நின்று வழிபாடு செய்தருளினார்கள். உரையுணர்வு ஒழிந்து மக்களும் அங்நிலை அடைந்தனர். முறையே ஏனைய வழிபாடுகளும் சிறப்பாக முடிந்தன. பின்னர் இரு மகா சந்நிதானங்களும் கட்டளை படத்திற்கு எழுந்தருளினார்கள்.

## தருமபுரத்தில்:

தருமபுரம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக அர்ச்சனைகள் செய்யப்பெற்றது. இரவு 9 மணிக்கு மகாசந்நிதானங்கள் தருமபுரம் ஸ்ரீ துர்க்காம்பிகையைத் தரிசித்து தருமை திருமடத்துக்கு எழுந்தருளினார்கள்.

இரவு தரிசனத்துக்குப் பின் துறைசை ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் திருவாவடுதுறைக்கு எழுந்தருளினார்கள்.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்கு

வேளூர் விஜயத்தில் அளித்த

# வரவேற்பிதழ்கள்

## வைத்தியநாதரை வழிபடும் வள்ளல் வருக !

ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகள் புள்ளிருக்கு வேளூர்ப் பெருமான் திருமுன்பு காதலாகிக் கசிந்து கைகூப்பி நின்ற பொழுது ஓர் சிவலிங்கம் கைவரப் பெற்றார்கள். ஆனந்தக் களிப்பு எய்தினார்கள். அந்தப் பெருமானையே ஆன்மார்த்த மூர்த்தியாகக்கொண்டு பூசித்துவரும் மரபில் வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் இங்கு எழுந்தருளப்பெற்றது மிக்க மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. இவ்வரவு இனிய வரவாகும்.

## திருச்சிற்றம்பலமுடையார் திருவடி மறவாச்செம்மல் வருக !

அவனன்றி ஓரணுவும் அசையாதென்பதை அநுபவ வாயிலாக அறிந்துய்யச் செய்யும் திருச்சிற்றம்பலமுடையாரை அதிகாரம் உடையவராகப் பெற்றது துறைசைஆதீனம். அவ்வாதீனத்தின் 21-வது மகாசந்நிதானமாக எழுந்தருளி உலகுய்யக் குனிக்கும் திருவடியைப் பூசித்து வழிபட்டுப் போற்றிவருகின்ற மகாசந்நிதானத்தின் வரவு மக்களுக் கெல்லாம் பேரருள் விளக்கத்தைப் புரிவதாகும்.

## பணிபல செய்யும் பண்புடைப் பெருமான் வருக !

பணியால் பரம்பொருளைக் காண்பதே பழுத்த ஞானியர் பண்பு. இப்பண்பேஉருவமாய் எழுந்தருளியிருக்கும் மகா சந்நிதானத்தின் பணிகள் செந்தமிழ்ச் சைவ உலகிற்குப் பெரிய விருந்தாகும். மகாசந்நிதானம் பல நூல்களைச் சிறப்புற

வெளியிட்டும், மாநாடுகளைக் கூட்டியும், நிர்வாகத்துறையிலே நேர்மையும் சீர்மையும் நிலவச்செய்தும் சமயநிதிகளுக்கு உதவியும், கல்விப்பணி பலபுரிந்தும், தமிழகம் முழுதையும் சிவமணம் கமழச்செய்யும் இப்பேருபகாரம் தமிழ்நாடு செய்த தவப்பயனாகும்.

## பஞ்சாக்கரதேசிகர் பதமலர்போற்றும் பண்புருவமே வருக!

ஞானபீடத்து ஆதி குருமூர்த்திகள் அருள்விளக்கங் காணவேண்டிய அவசியமான காலத்தில், தாமே அருட்பெரு மக்களை ஆசாரியபீடத்து அமர்த்திக்கொள்வது வழக்கம் அவ்வண்ணமே நமச்சிவாய மூர்த்திகள் திருவடிமலரை அனவரதமும் சிந்தையிற்போற்றும் மகாசந்நிதானத்தை ஆதி குருநாதன் அமைத்ததும், அவ்வாறே அவர்கள் அருள்வழி நின்று எல்லாம் குருநாதன் குறிக்கோள்' என ஞானச்செங் கோல் நடத்தி வருவதும், 'தெளிவுகுருரூபம்சிந்தித்தல்' என்ற திருமூலர் வாக்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

அன்று; சமயாசாரியர்கள் சிவஸ்தலங்கள்தோறும்சென்று சென்று சிவபரம்பொருளைத் தாமும் கண்டார்கள். உடன் வந்த அடியார்களுக்கும் அந்தந்த ஸ்தலங்களிலுள்ள அன்பர் களுக்கும் காட்டினார்கள். இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் சென்று தரிசித்தற்கரிய ஸ்தலங்களுக்கும் எழுந்தருளி நாட்டில் சிவமணங் கமழச்செய்து, கூட்டுப் பிரார்த்தனை முறையையும் யாத்திரைக்கிரமங்களையும் அறிவித்தருளுகின்ற ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் போற்றி உய்கின்றோம்.

வேளூர் தேவஸ்தானம்,
வைத்தீஸ்வரன்கோவில்
3—4—54.

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச்
சொந்தமான வேளூர் ஸ்ரீவைத்திய நாதசுவாமி
தேவஸ்தானம், டிரஸ்டி ஸ்தானீகம்,
**சொக்கலிங்கத்தம்பிரான்**

தாயை இழந்தும் தந்தையை இழந்தும் வெட்டவெளியே வீடாக நம்பி வாழ்ந்த நாங்கள் இந்த விடுதியில் படிக்கிறோம். எங்கள் அம்மா தையல்நாயகி, அப்பா வைத்தியநாதர், கடவுளை நம்பி இங்கு வந்துள்ள எங்களுக்கு இவ்வாழ்வு கிடைத்திருக்கிறது.

கைத்தொழிலும், கல்வியும் பயில்கிறோம். கடவுளை வழிபடப் பழகுகின்றோம். பெரியோர்களைத் தரிசிக்கின்றோம். நல்லொழுக்கம் தினந்தோறும் வளரப் பெறுகின்றோம். இப்படிப்பட்ட நன்மைகளை எங்களுக்கு உண்டாக்கி வைத்தவர்கள் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள். இவ்விடுதியில் வாழ்வதால் மகாசந்நிதானத்தின் தரிசனம் எங்களுக்குக் கிடைத்தது. எங்களுக்கு எல்லாம் தந்த இவ்வூர்ப் பெருமான் இதையும் அருள்செய்தார். எங்களுக்குக் கிடைத்த பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்!

வணங்குகிறோம்! வரவேற்கிறோம்!!

வேளூர் தேவஸ்தானம்,
வைத்தீஸ்வரன் கோவில்,
4—4—54.

அநாதைவிடுதி
மாணவ மாணவிகள்.

## துறைசை மடத்துத் தூமணி! வருக.

திருவாவடுதுறை, பொன்னியின் தென்கரையில் இருக்கும் தெய்வத் திருநகரம் திருமூலதேவர், சிவஞான சுவாமிகள் போன்ற அருளாளர்கள் வாழ்ந்த அருட்பூமி. அத்தகைய அருள்மணக்கும் துறைசையாதீனத்து இருபத்தொன்றுவது மகாசந்நிதானம் இந்நகருக்கு எழுந்தருளுவது மிக்க ஏற்றம் தருவதாகும்.

பெரியவர்களது வருகையால் ஊர் புனிதம் அடையும்; புது விளக்கம் அடையும். கண்ணன் விதுரன் வீட்டுக்கு எழுந்தருளியபோது, விதுரன் எழுந்து ஆடிப்பாடி வரவேற்று

கண்ணபிரான் வருகையால் தன் மாளிகை புனிதம் அடைந்ததைப் புகழ்ந்து பேசிப் பெற்ற இன்பத்தை இலக்கியத்திற் கண்டோம். அதுபோலத் தங்கள் வருகை அத்தகைய இன்பத்தை இன்று விளைவிக்கின்றது. வைத்தீஸ்வரன் கோவில் வரலாற்றிலேயே ஒரு சிறப்பு ஏற்பட்டுளது என்று பெருமை அடைகிறோம்.

## நல்ல தொண்டுகள் புரியும் நாத ! வருக.

மாநாடுகள் மூலமும், நூல் வெளியீடுகள் மூலமும் சைவத்துக்கும் தமிழுக்கும் மகாசந்நிதானம் செய்துவரும் தொண்டுகள் அநந்தம். அவற்றைத் தமிழ்நாடு நன்கு அறியும். தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக்கொண்ட இந்தப் பஞ்சாயத்துபோர்டு உள்ளன்போடு, மகாசந்நிதானத்தின் திருவடிபணிந்து வரவேற்கிறது.

அருட்செல்வர்களை அடிபணியும் பேறு ஆண்டவன் அருளாலேயே வாய்க்கவேண்டுமென்பது அனுபவஞானிகள் கருத்து. மகாசந்நிதானத்தின் வருகையை அடியேங்கள் விரும்பினால் பெறமுடியுமா? வள்ளல் வைத்தியநாதப் பெருமானார் இந்த வாழ்வை அளித்திருக்கிறார். அவனருளால் இச்சிறந்த பேறு பெற்றோம். திருவடி பணியப் பாக்கியம் பெற்றோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்கு வணக்கத்தையும் வரவேற்பையும் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

வைத்தீஸ்வரன் கோவில்,<br>
5—4—54.

பஞ்சாயத்து போர்டார்.

## துறைசை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்மீது

# பாடிய கும்மிப் பாடல்

திரு. க. சொக்கலிங்கம்,
தேவார ஆசிரியர், வேலூர் தேவஸ்தானம்.

1. திருவளருஞ்செழும் பொன்னியின்தென்கரைத்
திருவாவடுதுறை தனிலமர்ந்து
அருந்தமிழ்மந்திரம் செய்ததிருமூலர்
அமரும்பதியெனச் சொல்வாரடி

2. காழிஞானசம்பந் தன்தமிழ்பாடிப்பொற்
காசுபெற்றதலம் என்றும்அன்பாய்
வாழுந்திருமாளிகைத் தேவன் திருவிசைப்
பாமொழிந்த பதியென்பாரடி

3. இப்புவிவாழக் கயிலாயபரம்பரை
இருபத்தொராம்ஞான குருவாகவே
சுப்பிரமணிய தேசிகனுய்வந்து
தோன்றியஞானச் சுடராமடி

4. அண்ணல்வைத்திய நாதனையும்தில்லை
அமர்ந்துறைஅம்பல வாணனையும்
நண்ணியபூசனை நாளும்செய்புண்ணிய
ஞானமணியெனப் போற்றுமடி

5. தவஞானந்தழைக்கும் சிவஞானமுனிவரைத்
தானேஉலகுக்கு ஆக்கித்தந்து
அவமாயைஅகற்றிய அருள்நிறைவாமென
ஆன்றோர்புகழ அமையுமடி

6. அருங்குணமீனாட்சி சுந்தரனுகிய
அருந்தமிழ்வள்ளலை ஆதரித்துப்
பெருமானுறைதலப் பெருமையெலாம்சொலப்
பெற்றஇடம்என்று சொல்வாரடி

7. அந்திப்பிறைசூடும் பெருமானமர்ந்திடும்
ஆலயம்சிறப்பாய் நடத்தியாங்கே
செந்தமிழ்த்திருமுறை ஒலிக்கவும்கற்கவும்
செய்யும்சிவஞானச் செல்வனடி

8. சந்தானுசாரியர் அவதரித்ததலம்
தனைப்பரிபாலனஞ் செய்துநல்ல
மந்திரமாநாடும் மெய்கண்டான்மாநாடும்
மாநிலம்அறியவே செய்தானடி

9. அம்மையப்பனுறை ஆலயங்கள்தோறும்
அனுதினமும்சென்று வணங்கிமிக்க
செம்மையுற்ற செழும் திருமுறை மாநாடும்
செய்விக்க வல்லஎம் செல்வனடி

10. அரன்மகிழ்ந்துறைதிரு விடைமருதூரினில்
அரியபெருங்கல்விச் சாலையினைத்
திறம்படஅமைத்தே அறங்கள்பலபுரி
செம்மணியெனவே செப்புவோமடி

11. சமயம்தழைக்கநற் றமிழெங்குந்தழைக்கத்
தக்கநிதி அங்கங் கேஉதவி
அமையும்புலவரை ஆதரிக்கும்நல்ல
அன்பின்வடிவாய ஐயனடி

12. தெய்வவுணர்வொடு வாழவேமக்களைச்
சிறந்தவழியில் நிறுத்தியிங்கே
வையகம்சிறக்கவே வந்தஞானப்பெரு
வள்ளல்வாழச் சிவன்தாள்பணிவோம்

ராகம்: பந்துவராளி] [ஆதிதாளம்

பல்லவி

அய்யன்அம்மையோடமர்ந்து எங்கள்அருகிருக்க
அநாதைக்குழந்தைநாங்கள் ஆவதெப்படிவைத்திய (அய்)

அநுபல்லவி

வைகறையில்எழுந்து ஈசன்கழல்நினைந்து
மலர்பறித்துக்கொடுத்தே உணவைஅருந்திடுவோம் (அய்)

### சரணம்

1. பள்ளிசென்றேகல்வி பயின்றுவருவோம்நல்ல
பண்பொடும்பரிவொடும் பாதுகாத்தேஎங்கள்
உள்ளம்மகிழஅன்பாய் உபசரிக்கப்பெற்று
ஒன்றுங்குறைவின்றியே உயர்நலமுறுகின்றோம் (அய்)

2. சிவபுராணம்தனைஓதித் தினந்தோறும்கோயில்சென்று
திருமுறைப்பாடல்களைத் திறம்படவேகற்போம்
அவனியில்என்றுமே அடைந்திடுவோம்இன்பம்
ஆதலால்நாங்களே பாக்கியசாலியானோம் (அய்)

3. எதிர்காலத்தில்நாங்கள் ஏற்றமடைவதற்கே
ஏற்றவழிகளையே ஆக்கியதருமைப்
பதிஞானகுருவின் பாதமலரைத்தினம்
பணிந்திடுவோம் மேன்மைப்பயனடைவோம் (அய்)

4. திருவளர்துறைசைப் பதியமர்குருவின்
சேவடிபணிந்து போற்றிடுவோம்இன்று
இருகுருநாதரும் எழுந்தருளியதாலே
என்னபுண்ணியந்தான் முன்புசெய்தோமோ (அய்)

ராகம்: மோஹனம்] [ஆதிதாளம்

### பல்லவி

நேசமொடுநமசிவாய மூர்த்திபதம்பணிந்து
பூசனைபுரிஞான குருமணியேவருக (நேச)

### அனுபல்லவி

தேசம்புகழ்துறைசைப் பதிசுப்பிரமணிய
தேசிகவருகஎங் தேவேவருகதினம் (நேச)

### சரணம்

திருமூலர்தவம்செய்த தலமுடையோய்வருக
அருளாரமுதே வருகவைத்தியப்
பெருமானைவணங்கிப் பரிவொடெங்களுக்கே
கருணைபுரியவல்லாய் வருகவருகவே. (நேச)

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்மீது

# பாடிய கும்மிப் பாடல்

திரு. க். சொக்கலிங்கம்,

தேவார ஆசிரியர். வேளூர் தேவஸ்தானம்.

ஆனைமுகத்தனை ஐங்கரனை அம்மை
அப்பன் மகிழ்வேளூர் கற்பகனை
ஞானக்கொழுந்தினை நாளும் பணிந்துநாம்
நன்மைகள் யாவும்பெற் றுய்ந்திடுவோம். 1

கன்னலும் செந்நெலும் கலந்துவிளைசெழும்
கழனிகள் சோலைகள் சூழ்ந்ததிரு
பொன்னிநதியுடை நாடெனவே தக்க
புலவர் புகழ்சோழ நாடதனில் 2

திருமகள் கலைமகள் சிந்தைகளிப்பொடும்
சேர்ந்து வாழ்பதியொன் றுண்டென்னில்
தருமையம்பதியெனத் தரணியில்புகழ்ந்து
சாற்றுதற் கையமுண் டோசொல்லடி. 3

இப்புவிதன்னிலே கயிலாய பரம்பரை
இருபத்தைந்தாம் ஞான குருவாகவே
சுப்பிரமணிய தேசிக னுய்வந்து
தோன்றிய ஞானச் சொரூபனடி. 4

ஆலவாயமரும் சொக்க நாதனையே
அன்புடன் நாளும் பூசனைசெய்து
சாலச்சமயத் தமிழ்வளர்க்கும் ஞானத்
தந்தை யென்றேபுவி சாற்றுங்கடி; 5

விண்மீன் இருபத்து ஏழும்போல அருள்
விளங்கிய தேவால யந்தன்னைக்
கண்ணிமைபோலவே காத்து அரன்திருக்
கழல்மற வாச்சிவ புண்ணியனடி. 6

தெள்ளிய செந்தமிழ்த் தேவாரப்பாடலைச்
சிறுசிறு நூலாகவேதொகுத்து
அள்ளிவழங்கியே அருந்தமிழ்த் தொண்டினில்
ஆர்வங்கொள் அற்புத அண்ணலடி. 7

ஆலயந்தன்னில் தமிழ்மறை முழங்க
அங்கங்கே தக்காரை அமைத்துஒலி
சாலப்பெருக்கும் கருவி யமைத்துச்
சமயம் வளர்க்குநந் தலைவனடி. 8

தேவன் அமர்விடம் தன்னில்திருமுறை
சிறுவர் சிறுமியர் கற்கச்செய்து
யாவரும்போற்றிடப் பரிசளித்து நல்ல
அருந்தமிழ் வளரச் செய்வானடி. 9

ஊனசம்பந்தந் தனைநீக்கி யேதெய்வ
உணர்வினை மக்கட்கு ஊட்டிடவே
ஞானசம்பந்தம் எனும் மலரிதழை
நாடறி யத்தரும் நல்லமணி. 10

செந்தமிழ் வடமொழிப்புலவர் கல்லூரியைச்
சிறந்த முறையினில் தோற்றுவித்து
நந்தமிழ்நாடு நலஞ்சிறக்க நாளும்
நல்ல வழியையே காண்பானடி. 11

வையமுய்யத்திரு வள்ளுவர்குறளுரை
வளமெனும் நூலினைத் தாம்வழங்கிச்
செய்தற்கரிய செயலினையே செய்து
சீருடன் யாவரும் போற்றநின்றான் 12

ஊர்கள்தொறும் தெய்வஉணர்வினை ஊட்டவே
ஊர்தியமைத்து அதன்மூலம்
சீர்பெறும்சைவ சமயத் தமிழ்ப்பணி
செய்திறம் தேசம் அறியுமடி 13

அய்யன் வைத்தியன் தையலோடு வாழும்
அழகியவேளூர் தனில் நன்றும்
உய்யும் அநாதைக் குழந்தைவிடுதியை
உள்ள வுணர்வொடும் நிறுவி அதை. 14

அறநிலை அமைச்சர் வேங்கடசாமியாம்
அருங்குணச் செல்வர் மிக்கன்புகொண்டு
திறந்திட்டவிடுதிச் சாலையின் திறம்அதன்
சேவையை என்னென்று சொல்வதங்கே. 15

திக்கற்ற குழந்தைகள் சேர்ந்துபயின்றிந்தத்
தேசத்தில் முன்னேற வேண்டுமென்றே
மிக்கஅன்பாய் உணவும் உடையும்தந்து
மேலான செய்கையைச் செய்தானடி. 16

தமிழ்நாட்டின் தலைநகரமென்றேமேலோர்
சாற்றிடும் சென்னைமா நகரினிலே
சமயப்பிரசார நிலயத் தினைநாட்டித்
தண்டமிழ் காக்கும்நம் தந்தையடி. 17

ஆயிரம்ஆயிரம் பொற்காசு கைகளால்
அள்ளி வழங்கி அறநெறிக்கே
ஆயிரம்ஆயிரம் தொண்டுகளே செய்து
அமரும் தருமைஎம் வள்ளலடி. 18

வேதம்ஆகமம் முழங்கிடத் தமிழ்மறை
மேதினியெங்கும் விளங்கிடவே தக்க
சாதனைவழியினை அருள்சிவ மேயெனச்
சந்ததமும் தவம் செய்வானடி. 19

அஞ்ஞான இருளை விட்டகன்றிடவே
அனுதினமும் வேண்டித் தவங்கிடந்து
மெய்ஞ்ஞானச் சோதியில் நம்மையேற்றிவைக்கும்
மேலோன்வாழச் சிவன் தாள்பணிவோம். 20

# கந்தபுராணக் கவிச் சித்திரம்

ச. த.

**கலக்கமும் தெளிவும் :**

உயிர்கள் அறியாமையில் அழுந்தியிருக்கிறபோது கலங்குகின்றன. கலங்கியபோது எல்லாம் தீமை செய்வனவாகத் தோன்றுகின்றன. காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாதல்போல. தெளிவு ஞானோதயம்.

**ஞானனுபவம் :**

அப்போது ஒரே ஆனந்தந்தான். அப்படி இந்திரன் ஆணவத்தால் விளைந்த அஞ்ஞானத்தில் அழுந்திய நிலையில் ஐயோ! சயந்தனைவிட்டோம். அரசும் போயிற்று. ஆண்டவனைத் தரிசிக்க அரும்பாடுபட்டோம் அவரும் காட்சிதந்தார் மறைந்தார். ஆ! நமது துன்பவிடுதலை இப்போதில்லையாமே. என்செய்வது என்று கலங்கினன். கலக்கத்தின் முடிவு தெளிவு. மறைகின்ற காலத்து மகேஸ்வரன் என்ன சொன்னர் என்று எண்ணிப்பார்த்தான். 'செய் தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தென்ன. அன்றைக்குத் தக்ஷயாகத்திற்குப் போனபோது - அவனுடன் சிவநிந்தைக்கு உடந்தையாக இருந்தபோது - அந்தப் பாவம் கழியும் வரையில் இந்த நிலைதான். மேல் கந்தன் அவதரிப்பான். கவலை தீர்ப்பான்' என்ற அருளுரைகள் ஆனந்தத்தை விளைவித்தன. தெளிந்தான் மகிழ்ந்தான்.

**நீளயோசனை :**

ஆமாம், இந்த முனிவர்கள் சந்தேகம் நீங்குவது எப்போது? இறைவன் யோகம் முடிவது எப்போது?

**ஆமை கிணற்றிலே - அணில் கொம்பிலே.**

இவர் இங்கே எழுந்தருளியிருக்கிறார். அதுவும் யோகியாக. அம்மை பராசத்தி இமவான் மகளாக இமையத் துச்சியில் கௌரி சிருங்கத்தில் கடுந்தவம் புரிகிறாள். இரண்டு பேரும் கூடுவது எப்போது. குமரன் பிறப்பதெப்போது. எமக்கு எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறதே என்செய்வது என்று மேலும் கவல்கிறான் இந்திரன்.

**மாசறு காட்சிகொண்ட மாதவர்க்கு அருளி எங்கோன்**
**தேசுறு கயிலையுற்றான் உமையவள் இமையஞ் சேர்ந்தாள்**
**ஆசறு குமரன் அன்னார்க்கு அடைவது எத்தன்மை? என்னு**
**வாசவன் இருந்து நாடி மனமிசைக் கவலைகூர்ந்தான்.**

(மாசு - காமகுரோதாதிகளாகிய குற்றம், காட்சி - ஞானமுமாம்; தேசு - ஒளி; வாசவன் - இந்திரன்; செல்வமுடையவன் என்ற காரணத்தால் வந்த பெயர். ஈட்டலும் காத்தலும், எல்லாந் துன்பம் அல்லவா? அதனால் கவலைகூர்ந்தான்.

**அடைக்கலம் வைக்கிறான்:**

ஆபத்துவந்த காலத்துக் கைப்பொருளை, தக்க நம்பிக்கையுள்ள இடத்தில் கொடுத்துவைப்போம். வேண்டியபோது குறைவின்றிப் பெற. ஆனால், பேருடைமையாகிய பெண்டாட்டியை அடைக்கலம் வைக்குமிடம் எப்படியிருக்கவேண்டும்; இந்திரனுக்குத் தெரியும் தன்போன்றாரிடத்து வைத்தால் பேராபத்து என்று. தான் திருடன் பிறரை நம்பான் அல்லவா? சிறிது யோசித்தான். தமது குலகுரு வியாழ பகவான் ஞாபகம் வந்தது. அவர் மனைவி ஞாபகம் வந்தது. அங்கே அடைக்கலமாக அவளை வைப்பதுதான் நலம் என்று எண்ணுகிறான். மனோவதி நகரையடைந்து, நினைத்தபடியே இந்திராணியை ஒப்புவித்துவிட்டுத் தேவ பரிவாரங்களோடு சத்தியலோக யாத்திரைக்குப் புறப்பட்டான். பிரமாவின் சபையை அடைந்தான்.

மயர்வொடு துறக்கமன்னன் மனேவதி என்னும் ஆண்டை
வியன்நகர் எய்தி ஆங்கண் வீற்றிருந் தருளும் பொன்னின்
இயன்முறை மனேவிதன்பால் இல்லினை இருத்தல் செய்தாங்கு
அயனுறு கடிமாண்கோயில் அடைந்தனன் அமரரோடும்.

(மயர்வு - மயக்கம்; துறக்கம் - சுவர்க்கம்; பொன் - வியாழன்
கடிமாண்கோயில் - பத்மசதனம்.)



**இந்திரன் :** ஸ்வாமி வணக்கம். என்ன உத்சாகம் இல்லாமல் இருக்கிறீர்களே ! ஏது ஓய்வு போலிருக்கிறதே!

**பிரமன் :** இன்றைக்குமட்டுமா ? நெடுநாளாக இப்படித்தான்.

**இந்திரன் :** ஏனே !

**பிரமன் :** அதுதான் நம்முதல்வன் யோகியாக இருக்கிருரே அப்பா! நமக்குச் சிருஷ்டிவேலை ஏது? அதுகிடக்கட்டும் நீவந்த காரியம் என்ன? அதனைச்சொல்லு,

**இந்திரன் :** தாங்கள் சதுர்முக பிரமாவாக இருந்தும், முக்காலம் உணர்ந்த ஞானியாக இருந்தும், குறிப்புணரும் பெருமானாக இருந்தும் என்னைக் கேட்கிறீர்களே! எல்லாம் சூரபன்மனால் நாங்கள் படும்பாட்டைத் தெரிவித்துக் கொள்ளத்தான்.

**பிரமன் :** நானென்ன செய்யட்டும். எல்லாம் இறைவன் செயல்.

**இந்திரன் :** இறைவனையும் தரிசித்தேன். கந்தன் வருவான் கவலைதீர்ப்பான் என்றார். காலம் தெரியவில்லை.

**பிரமன் :** பின்னே அதுவரை பொறுத்திருக்கிறதுதானே;

**இந்திரன் :** ஐயோ நானும் தேவர்களும் பிழைப்ப தெப்படியோ!

**பிரமன் :** இறைவனை லேசாக நினைத்து விட்டாயா! அவன் அனைவர்க்கும் மேலானவன்! கருணாமூர்த்தி! வருந்தியவர்க்கு உதவும் மருந்தனையான்! காலம் அறிந்து இடம் அறிந்து நாம் செய்யும் வினையறிந்து நீதி வழங்கும் நேர்மையாளன். ஆதலால் ஏதோ திருவுள்ளத்தில் எண்ணி முனிவரைப் போலக் கல் ஆலடியில் எழுந்தருளியிருக்கிறார்.

**இந்திரன் :** இவர் ஏனையா முனிபோல இருக்கவேண்டும். நாம் அவரை நினைத்துத் தவம் செய்கிறோம். அவர்யாரை நினைத்துத் தவஞ் செய்வார்!

**பிரமன் :** போ ஐயா பைத்தியம்! நான் பறந்து பார்த்தேன் அவர் முடியைக் காணமுடியவில்லை! எங்கப்பாகூடத் தோண்டித் தோண்டிப் பார்த்தார் அவர் அடியைக் காணமுடியவில்லையே, அப்படிப்பட்ட அவர் நினைக்கக் கூடிய தெய்வமும் வேறொன்று உண்டோ? அவர் யோகம் இருப்பது எல்லாம் நமது குறையைப் போக்கத்தான். இதை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்,

செங்கண்மால் தானும் நானும் தேடுதற்கு அரிதாய்நின்ற
எங்கள் தம்பிராற்கு மேலா எண்ணஓர் தேவும் உண்டோ!
அங்கு அவன்ஞானபோதம் அறிவருக்கு உணர்த்திவைகல்
நம்குறை முழுதும் மாற்றும் நல்லருளாகும் அன்றே!

இந்திரன்: ஆமாம்! நாங்கள் படும் கஷ்டத்திலே தாங்களும் இப்படியா உபதேசிப்பது. எங்களுக்கு வேண்டியது இன்பம், உபதேசமில்லை.

பிரமன்: நெஞ்சம் பதறுதே! சிந்தித்துப்பார்! நமது அப்பா அம்மா இருக்கிறார்கள். நமக்குத் தலைவலி காய்ச்சல் வந்து விடுகிறது. எங்கோ கட்டி, பிளவை புறப்பட்டு விடுகிறது. வைத்தியரிடம் கொண்டுபோய்த் தள்ளுகிறார்கள். அறுக்கச் சொல்லுகிறார்கள். பொசுக்கச் சொல்லுகிறார்கள். கசப்பு மருந்தைக் குடிக்கவைக்கிறார்கள். இதெல்லாம் நம்மீது அவர்களுக்குள்ள ஆத்திரமா! இல்லையே! அன்பல்லவா. அதுபோலத்தான் ஆண்டவனும் நமக்குப் பரமபிதா. உயிர்ப்பிதா! நம்மை அநாதியே பற்றிவருகின்ற ஆணவபந்தத்தால் விளைகின்ற பிறவி நோயைப் போக்கவேண்டும். நாம் எப்போதும் ஆனந்தஸ்வரூபமாக இருக்கவேண்டும் என்கிற ஆசை. அதனாலே இந்தக் கஷ்டங்களை அனுபவிக்கச் செய்கிறார். வீண தொலைந்தது. கணமும் தாமதியார். வந்து காப்பாற்றுவார்.

பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகள் தம்பால் நோயொன்று
உற்றிடிற் பிறரைக் கொண்டும் உறுதுயர் செய்துதீர்ப்பார்
மற்றவர் தம்பால் அன்போ! வன்கணோ அதுபோல்நம்பால்
பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனும் இவைகள்செய்தான்

(குரவர் - தாய்தந்தையர், வன்கண் - கொடுமை, பவம்-பாவம் பிறவியுமாம்.)

397

# ஆன்மா

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்

(முன் தொடர்ச்சி)

ஆன்மா குணி, ஆன்ம ஞானம் குணம், ('அறிய இரண்டல்லன்' என்னும் சிவஞானபோத வெண்பாவுரை சூ. 6 பார்க்க.) ஆன்மா பசு என்று கூறப்படுதற்குக் காரணம் ஆணவ மலச்சார்பே ஆகும். ஆணவமலத்தைப் பசுத்துவம் என்பர். பசு - குணி, பசுத்துவம் - குணம், பசுவை நோக்கிப் பசுத்துவம் குணம் எனப்படும். பசுத்துவத்தை நோக்கிப் பசு குணி எனப்படும். ஆணவமலத்தில் மறைப்பை அடைந்து கிடக்கும் காரணத்தால், ஆன்மா பசு ஆயிற்று. அம்மறைப்பு நீங்கினுல், ஆன்மா எனப்படும். ஆன்மாவின் இச்சையும் (விருப்பமும்) ஞானமும் (அறிவும்) கிரியையும் (தொழிலும்) ஆணவமலத்தில் மறைந்து கிடக்கும். அப்பொழுதுதான் பசு என்ற பெயர் பொருந்தும். மலம் நீங்கிய உயிரையே ஆன்மா என்ற பெயரால் குறித்தல்வேண்டும். இது சொற்பொருளுண்மைக் கேற்றவாறு, பொருளேக்கமின்றி எல்லாச் சொல்லையும் ஆளுவதுபோல இதையும் ஆளும் வழக்கம் சான்றோர் நூலகத்தும் காணப்படுகின்றது. தொல்காப்பியர் முதலியோர், சொற்பொருளையும் பெயர்ப்பொருளையும் கருதி ஆளும் இயல்பினர் என்பது அவர் செய்த நூல்களை ஆராய்வார்க்கு இனிது புலப்படும்.

ஆன்மா வியாபகம் உடையதாயினும் ஆண்டவனைப் போல வியாபகம் உடையதன்று. வியாபகம் எங்கும் நிறையும் இயல்பு. பாலின் நெய், பழத்தின் சுவை, எள்ளின் நெய் போல ஒரு பொருளில் முழுதும் வியாபகமாக ஒன்றுபட்டிருத்தலை வடமொழியில் உபச்சிலேடம் என்பர். உபச்சிலேட வியாபகம் என்பது ஔபச்சிலேடிக வியாபகம் என்று

விருத்தியுற்ற வடிவும் உடையது. ஔபச்சிலேடிக வியாபகம் ஆண்டவனுக்குள்ளது. அது அதுவாய் வசிப்புண்ணும் வியாபகம் ஆன்மாவிற்கு உள்ளது. அதுவதுவாய் வசிப்புண்ணுதல் ஆன்மாவின் இயல்பு. அதுவே சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல். படிகம்போலத் தன்னால் சாரப்பட்ட பொருளின் தன்மையே தன் தன்மையாகக் கொண்டு அதுவது வாய்நிற்பது ஆன்மாவினிலக்கணம். இதனை உறுதிப்படுத்தும் **அநுமான வாக்கியத்தைக் காண்க :—**

1. ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறிவன். (மேற்கோள்).

2. ஒன்றனை அறியும் வழி மற்றொன்றனை அறியாமையின் (ஏது).

3. யாவன் சார்ந்ததன் வண்ணமாகாது நின்று அறிவான்? அவன் ஒன்றனை அறியுங்கால் மற்றொன்றனை அறிவான் அல்லன், சிவன்போல (எடுத்துக்காட்டு).

(தற்றருமதருமி' என்றதும் சார்ந்ததன் வண்ணமாம். இயல்பி என்றதும் மொழியால் வேறுபடினும் பொருளால் வேறுபடாமை காண்க).

ஆன்மா எதனை எதனைச் சார்ந்தான் அதனதன் சுபாவமே தன் சுபாவமாய் நிற்பன். ஆன்மா, தன் இயல்பை அறியாது பசுத்துவத்தொடு கூடிய வழிப்பசுவாய் நின்றான். அதுபோலத் தன்னை அறிந்து சிவத்துவத்தொடு கூடிய வழிச் சிவமாய் நிற்பதற்கு ஐயமில்லை.

ஆன்மா, பசுத்துவக் கூட்டத்தால் பசு எனப்படும். சிவத்துவக் கூட்டத்தால் சிவம் எப்படும்.

அதுவதுவாதலைச் சருவஞானோத்தராகமம் ஆறுவகைப் படுத்துக் கூறுகின்றது. அவ்வாற்றால் அதை விளங்க உணர்தல் கூடும் ஆதலின், அவ் வாறு வகையையும் சுருக்கிக் கூறுகின்றோம்.

## 1. பூதான்மா

உடம்பு பஞ்சபூத பரிணமம். மண், நீர், தீ, கால், விண் என்னும் ஐந்து பூதங்களின் பரிணமமே உடம்பு. அத்தகைய உடம்பில் உயிர் புகுந்து இருந்து (வாழ்ந்து) இறக்கின்றது. உயிர்க்கு உடம்பு இடம். உடம்பாகிய இடத்தில் இருக்கும் பொருள் உயிர். சார்ந்தது உயிர், சாரப்பட்டது உடம்பு. சார்ந்த உயிர் சாரப்பட்ட உடம்பின் வண்ணமாய் நிற்கின்றது. உடம்பே உயிர் என்று கொண்டுள்ள உயிர்களுக்குக் கணக்கில்லை, சிலவுயிர்களே உயிர் (நாம்) வேறு; (நமக்கு) இடமாகிய உடம்பு வேறு என்று உணர்ந்துள்ளன. இங்கு இதைப்படிப்பவர், தம்மையும் தம் உடம்பையும் வேருக எண்ணியது எப்போது என்று சிந்திக்க. உடம்பே தாமாக இருப்பவர் பெரும்பாலோர். அவர் எல்லாரும் **பூதான்மாக்கள்** ஆவர். பிணத்தைக் கட்டிக்கொண்டு அழுபவரிடத்தில் இவ்வுண்மை புலனுகும்.

## 2. அந்தரான்மா

உடம்பு 1. தூலதேகம், 2. சூக்கும தேகம், 3. பர (அதி சூக்கும)தேகம் என மூன்று பிரிவுடையது. பர(அதி சூக்கும)தேகம். 1. காரண சரீரம் 2. கஞ்சுக சரீரம் 3. குணசரீரம் என மூவகையது, இவற்றைப் பின்வரும் கட்டுரையில் விளக்கி எழுதுவோம். இங்கு இப்பிரிவை மட்டும் அறிவதே போதும்.

பரசரீரத்தின் உள்ளாக நாதமாத்திரையாய் விளங்குவதும் ஞானமாத்திரைக்கு ஏது ஆவதும் இலக்கணமாக உடைய சூக்குமவாக்கு உண்டு, அவ்வாக்கே பைசந்தி, மத்திமை, வைகரி என்று விருத்தி அடையும் அதிகாரம் உடையது. சூக்குமவாக்கோ அழியாது. அதன் அதிகாரமாகிய பைசந்தியும் மத்திமையும் வைகரியும் ஆகியவாக்குக்கு அழிவுண்டு. சூக்கும வாக்கு, சுத்தமாயாரூபமாய்க் கேடின்றி நிலை பெறுவது. தவவிசேடத்தால் அதனை உள்ளபடி காண

லாம். 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற தொடர்ப் பொருளை உணர, அவ்விடத்தைச்சார்தலே அநுபவமாகும்.

சூக்குமை முதலிய நால்வகை வாக்குக்களையும் பற்றி அவற்றின் வண்ணமாய் நிற்கும் ஆன்மா **அந்தரான்மா** எனப்படும்

பாட்டொலி முதலியவற்றில் ஈடுபட்ட ஆன்மாக்கள் நிலையைநோக்கின் இது புலப்படும். உடம்பை மறந்து, ஒலி வண்ணமாகி நிற்கும் ஆன்மாக்களே 'அந்தரான்மா'க்கள். (அந்தர் - உள். உடம்பின் உள்ளிடத்தன வாக்குக்கள். உடம்பு புறம். வெளி வாக்குக்கள் அகம் உள். அந்த ரான்மா - அகத்துயிர்,)

## 3. தத்துவான்மா

'பூதான்மா' என்றதன் விளக்கத்தில், தூலபூதங்கள் குறிக்கப்பட்டன. அவற்றால் ஆகிய உடம்பு தூலதேகம், சூக்கும பூதங்களால் ஆகிய உடம்பு சூக்கும தேகம். தூல தேகத்தில் இருந்து சுகதுக்க போகங்களை அநுபவிக்கின்றன ஆன்மாக்கள். போகின்றன வருகின்றன. சூக்கும தேகமும் அவ்வாறு செய்யப் பயன்படும் ஆயினும் அவ்விரண்டற்கும் வேறுபாடு ஒன்றே. அஃதாவது:- பருமை நுண்மை ஆவதே. பருமை (ஸ்தூலம்). நுண்மை (சூக்ஷமம்). தூலதேகம் இவ் வுலகில்மட்டும் போக்குவரவு செய்தற்கு கருவியாகும். சூக்கும தேகம் ஓர் உலகினின்றும் மற்றோருலகிற் போக்குவரவு செய்தற்கும் கருவியாகும். தூலதேகத்திற்குப் புற இந்திரி யங்கள் இன்றியமையாதவை. சூக்கும தேகத்திற்கு அந்தக் கரணங்கள் இன்றியமையாத உறுப்புக்கள். அவை உடன் நிற்றலின் அவற்றையும் கூட்டிச் சூக்குமதேகம் என்பர். தன் மாத்திரை ஐந்தும் அந்தக்கரணம் மூன்றும் (மனம் புத்தி அகங்காரம்.) புரியட்டக தேகம் எனப்படும்.

**தூலதேக வடிவாகிய தத்துவங்கள்** அவரவர் போகநுகர்ச்சிக்குச் சிறப்புவகையால் நிலைக்களம் ஆகும்.

சந்தனம் பூமாலை முதலியவைபோலப் **பொதுவகையால்** மனைவி முதலியோர்க்குப் **போக்கியம் ஆகும்.** ஆதலின் **பொதுச்சிறப்பு** எனப்படும். படவே பொதுவெனவும் சிறப்பு எனவும் தனித்தனி இரண்டு இருக்கின்ற உண்மை புலனாகும்.

**புவனவடிவாகிய தத்துவங்கள்** போக நுகர்ச்சியில் எல்லாவுயிர்க்கும் பொதுவாய்ப் போகம் பயப்பித்தலின், **பொது** எனப்படும்.

**புரியட்டக வடிவாகிய தத்துவங்கள்** உயிர்தோறும் வேறுவேறாய் நின்று போகம் பயப்பித்தலின். **சிறப்பு** எனப் படும். இவ்வாறு தத்துவங்கள் மூவகைப்படும்.

நிலம் முதல் கலைமுடிய உள்ள முப்பத்தொரு தத்துவங் களும் **புறப்புறக்கருவி, புறக்கருவி, அகப்புறக்கருவி, அகக்கருவி** என்று நான்கு வகைப்படும்.

1. **புறப்புறக்கருவி :—** ஐந்து பூதங்களும் ஐந்து தன் மாத்திரைகளும்,

2. **புறக்கருவி :—** பத்து இந்திரியங்களும், (மெய் வாய் கண் முதலியன + வாக்கு, பாதம் முதலியன.)

3. **அகப்புறக்கருவி :—** மனம் முதலியன.

4. **அகக்கருவி :—** அராகம் முதலியன.

இந்நால்வகைக் கருவிகளாகிய முப்பத்தொரு தத்துவங் களும் பொது, சிறப்பு, பொதுச்சிறப்பு என்ற மூவகையில் பயன்படும்போது. ஆன்மா அத்தத்துவங்களைச் சூக்கும நிலையிற்பற்றி அவற்றின் வண்ணமாய் நிற்கும். அந்நிலை யிலும் ஆன்மா எவ்வெத் தத்துவத்தைப்பற்றும்? அவ்வத் தத்துவ மயமேயாய் நிற்கும். மண்ணை நினைந்துபற்றி மண்ணாய் விண்ணை எண்ணிப்பற்றி விண்ணாயும் நிற்கும் இயல்பு முதலியன எல்லாம் **தத்துவான்மாவிற்கே** உரியன.

இவை அநுபவத்தில் பலர்க்கு எய்தியிருக்கலாம். அநுபவிக்கும்போது சுட்டியுணர்த்தின் இனிது புலப்படும்.

ஆன்மா, போத்திருத்துவம் (போகநுகர்ச்சிக்கு வினை முதலாம் இயல்பு) அடைந்து **புருடதத்துவம்** என்று நிற்கும்.

## 4. ஜீவான்மா

முற்கூறியவாறு புருடதத்துவமாய் நின்று, பிரகிருதி குணங்களைப்பற்றி இன்பத் துன்பங்களை அநுபவிக்கும் நிலையில், ஆன்மாக்கள் ஜீவான்மாக்கள் என்று குறிக்கப் படும். சிவஞானபோதம் மூன்றுவது சூத்திரத்தின் ஐந்தாவது அதிகரணத்தில் 'இன்பத் துன்பம் ஜீவனம் பிரகிருதிக்கு இன்மையின்' என்றது உணர்க.

இன்பத்துன்ப நுகர்ச்சி 'உண்டி' என்றும், ஜீவனம் (உடம்பு சேட்டித்தல்) 'வினை' என்றும் அச்சூத்திரத்தில் உணர்த்தப்பட்டன. 'உளது ... ... கண்படில் உண்டிவினை இன்மையின் ... ... தநுவினுள் ஆன்மா.'

இங்கு மாயாவாதிகள். 'ஜீவான்மா' என்று குறிக்கும் நிலையையும் ஆராய்க.

## 5. மந்திரான்மா

சுரர், நரர், விலங்கு, புள், தாவரம் எல்லாவற்றிற்கும் அதிதெய்வ மந்திரங்கள் உள்ளன. அவை தமிழில் இல்லை. இருந்தன என்பவர் ஆதாரம் காட்டவல்லாரல்லர். எல்லா மந்திரங்களும் வடமொழியில் இருத்தலால், தமிழில் ஆலய கிருத்தியங்களைச் செய்ய வழியில்லை. அதிதெய்வமந்திரங்கள் இருந்தால்தான், நச்சுக்கடித்துன்பநீக்கம் முதலிய சிறு பயன் களும் பிறவித்துன்ப நீக்கம் பேரின்பப்பேறு ஆகிய முடிந்த பெரும்பயன்களும் உயிர்கட்கு எய்தல்கூடும். தாவரங்களி லும் ஜங்கமங்களிலும் மந்திரங்களால் அதிட்டிக்கப்படாத

H03



உயிர்கள் இல்லை, மந்திரங்களை உச்சரிக்கும் முறைமையை அறிவது இன்றியமையாதது. மந்திரங்களின் இயல்பையும் உணர்தல் வேண்டும்.

ஆன்மா, எவ்வெம் மந்திரத்தைக் கணித்தாலும் அவ் வம்மந்திரமயமாய் நிற்கும். கருடமந்திரமயமான காரணத் தால்தான் விடம் நீக்கும் காரியம் உண்டாகின்றது. மந்திர ஜபம்புரியும் ஆன்மாக்கள் அவ்வம் மந்திரமயமாய் நில்லா தொழிந்தால் அவ்வம் மந்திரத்தால் ஆகும் பயனை அடைய மாட்டா. நில்லாமை அசம்பவம், ஆரம்பத்தில் சம்பவிக் கலாம். பயிற்சியில் மந்திரமயமாகியே தீரும்.

தன்னைச்சார்ந்த பலவேறுவகைப்பட்ட வர்ணங்களையே தன்பால் காட்டிநிற்கும் இயல்புடைய படிகம்போல ஆன்மா, தன்னைச்சார்ந்த மந்திரங்களின் மயமாகும். இச்சார்ந்ததன் வண்ணமாந்தன்மையே, ஆன்மாவின் பொதுவியல்பு.

## 6. பரமான்மா

அப்பொதுவியல்பு, ஆன்மாவிற்கு இந்திரியச்சார்பால் வந்தது. தன்னைச்சார்ந்த இந்திரியங்களின் இயல்பையே தன்மாட்டு விளக்குவது அச்சார்ந்ததன் வண்ணமாந் தன்மை யுள் ஒன்று. பொதுவியல்பு பலவேறுவகைப்படும். சார்ந்த தன்வண்ணமாந்தன்மையைச் சிந்தித்து உணர்ந்து கொண்டு, அப்பொதுவியல்பை வெளிப்படுத்தும் துணையான இந்திரியங் களை வேறாகக் கண்டு, நீங்கி, சிறப்பியல்பை உணர்தல் வேண் டும். உணர்ந்த ஆன்மா, பரம்பொருளாகிய சிவபிரானுக்கு அடிமையாகும், அச்சிவச்சார்பால் அப்பரம் பொருளின் இயல்பு தன்பால் விளங்கும். சிவமயமாகும். 'சிவமயம்' என்பதன் உண்மைப்பொருள் இங்குச் சிறிது புலப்படும். சிவமயமாகிய ஆன்மாவைப் பரமான்மா என்பர். இங்குச் சிவம் எனப்படும் பரமான்மாவை மறத்தல் ஆகாது.

(தொடரும்)

# ஆதீனத்திலும், ஆதீன தேவஸ்தானங்களிலும் :

## வேளூரில் பங்குனி உத்திரத் திருவிழா திருமுறை மாநாடு

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 10-3-54 தொடங்கி 18—3—54 முடிய சிறப்பாகப் பிரமோற்சவம் நடைபெற்றது.

13—3—54 தொடங்கி 16—3—54 முடிய கீழ்க்கண்டவாறு திருமுறை மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. 13—3—54 தொடங்கி சனிக்கிழமை மாலை 6-மணிக்கு வித்துவான் ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் 'ஞானத்தமிழ்' திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்கள் 'தொண்டுத்தமிழ்'. 14—3—54 மாலை புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'தோழமைத்தமிழ்' திருமதி. கண்ணுமணி அம்மையார் அவர்கள் 'மணித்தமிழ்' 15—3—54 திங்கள் மாலை வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் 'இசைத்தமிழ்' வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'மூலர்தமிழ்'. 16—3—54 மாலை வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் 'புலவர் தமிழ்' திரு. மருணீக்கியார் அவர்கள், 'தொண்டர்தமிழ்'.

15, 16—3—54 நாட்களில் கீர்த்தனகுலசேகர எம்பார் பிர்மஸ்ரீ. விஜயராகவாசாரியார் அவர்களால் 'சுந்தரர்' கதா காலக்ஷேபம் நடத்தப்பெற்றது.

## திருபுவனத்தில் தேவாரவகுப்பு ஆண்டுவிழா திருமுறை மாநாடு

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத் தேவார வகுப்பு ஆண்டு

விழாவும் திருமுறை மாநாடும், 22—3—54 மாலை 4-மணி முதல் சிறப்பாக நடைபெற்றது.

சீகாழி கட்டளைவிசாரணை ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வந்திருந்த பெருமக்கள் அனைவருக்கும் வரவேற்பு கூறினர்கள். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் வித்துவான், திரு. வேங்கடராமையா அவர்கள் தலைமை தாங்கிப் பரிசுகள் வழங்கினர்கள். புலவர், திரு முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'ஞானத் தமிழ்' திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் 'அப்பர் அருள்நூல்' வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'பொன்தமிழ்' வித்துவான், திரு. சொ. சிங்கார வேலன் 'தேன்தமிழ்' வித்துவான், திரு. வை. திருஞான சம்பந்தம் அவர்கள் 'கோவைத்தமிழ்' வித்துவான், திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள் 'இசைப்பாத்தமிழ்' வித்துவான், திரு. பொன்சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் 'மூலர் தமிழ்' வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'இறைவர்தமிழ்' வித்துவான், திரு. B. மகாலிங்கம் அவர்கள் 'ஆற்றுப்படை', வித்துவான், ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் 'தேம்புனமே நீ சொல்', வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் 'தொண்டர்தமிழ்' இரவு 9-மணிக்குத் திருமுறை ஊர்வலம் நடைபெற்றது. உற்சவநாட்களில் 15—3—54 அன்று பனசை செந்தமிழ்க் கல்லூரி தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. M. சுந்தரேசப்பிள்ளை அவர்கள் 'சிவபுராணம்' என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். 17—3—54 புதன்கிழமை பிர்மஸ்ரீ. விஜயராகவாசாரியார் அவர்களின் 'திருநீலகண்டர்' கதாகாலக்ஷேபம் நடைபெற்றது.

## பேரளத்தில்:

பேரளம் ஸ்ரீ சுயம்புநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திர மகோற்சவம் சிறப்பாக 10—3—54 முதல்

நடைபெற்றது. 13—3—54 சனிக்கிழமை நாகை தேசிய உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் "மாதவக்கலயர் என்னும் பொருள்பற்றியும் 14—3—54 ஞாயிற்றுக்கிழமை திருக் கருகாவூர் சமயத்தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்கள் ஆலயவழிபாடு என்பதுபற்றியும் 15—3—54 திங்கட்கிழமை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் வித்துவான், G. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் 'வள்ளுவரும் வாகீசரும்' என்பதுபற்றியும் சொற்பொழி வாற்றினர்கள்.

## ஏகதின லக்ஷார்ச்சனை

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ தர்மபுரீஸ்வரசுவாமி ஆலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு 19—3—54 வெள்ளிக்கிழமை ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

## ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவ ஸ்தலங்கள் தோறும் அபிஷேக ஆராதனைகள் செய்துவரும் வழக்கம்போல் இம்மாதத்திலும் 20—3—54 அன்று திருப் பனையூர் ஸ்ரீ சௌந்தரேசுவரர் ஆலயத்தில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளி யீடாக அச்சிட்ட திருப்பனையூர்த் திருப்பதிகம் என்ற ஆதீன வெளியீடும் அன்பர்கட்டு வழங்கப்பெற்றது. ஆதீன ஓதுவா மூர்த்திகளைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதச் செய்யப்பெற்றது.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலயம்

### வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில்

# திருவெம்பாவை திருப்பாவைப் பரிசளிப்பு விழா

கடந்த மார்கழித்திங்கள் ஷை நிலயத்தில் திருவெம்பாவை-திருப்பாவை மகாநாடு நடைபெற்றது. அம்மகாநாட்டில் எதிர் பாராத விதத்தில் கனம் இராஜாஜியவர்கள் கலந்துகொண்டு விரிவுரையும் நிகழ்த்தினார்கள். அரசியலில் கடவுள் நம்பிக்கையை வலியுறுத்துவதோடு இந்நிலயத்தையும் தொடங்கி வைத்து இடையிடையே இம்மாதிரி ஊக்கிவைத்தும் வருவதைத் திருவுளங்கொண்ட ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள், திருவெம் பாவை - திருப்பாவைப் பாடல்களை மனப்பாடம் செய்து பொருளுணர்ச்சியுடன் இசை கலந்து பாடும் மாணவ மாணவியர்கட்கு இராஜாஜி பெயரால் பரிசளிக்க ஆணை தந்தார்கள்,

அதன்படி அறிவித்ததில் முப்பது மாணவ மாணவியர் போட்டியில் கலந்துகொண்டனர், தமிழ்ப் போாசிரியர் திரு, R. P. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையில் தேர்வு நடைபெற்றது. தேறிய மாணவியர்கட்குப் பரிசளிக்குமுகத்தால் திருவெம்பாவை - திருப்பாவைப் பரிசளிப்புவிழா 12—3—54 மாலை 6-மணி அளவில் கொண்டாடப்பெற்றது. பரிசுபெற்ற மாணவியர் கடவுள் வணக்கம்பாடினர். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றார்கள். போட்டித் தேர்வு நடத்திய பேராசிரியர் R. P. சேதுப் பிள்ளையவர்களே மனமுவந்து பரிசளிப்பு விழாத் தலைமைக்கும் இசைந்தார்கள். அவர்கள் தலைமையுரையில் கூறியதாவது.

பாவைக்கும் சென்னைக்கும் நெடுநாட்களாகத் தொடர்பு உண்டென்றும், ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் மயிலாப்பூரில் இருந்த பூம்பாவையைத் திருஞானசம்பந்தர் உயிர்ப்பித்தமையால் இந்நிகழ்ச்சி வலியுறுத்தப்பெறுமென்றும்,

இருபாவைகளும் இருகண்கள் போன்றன என்றும், இப்பாவைப் பாடல்கள், மக்கள் வாழ்விற்கு வேண்டிய மழை வளந்தருவன என்றும், இப்பாவைப் பாடல்களில் தேறிய மாணவியர்கட்கு இராஜாஜி பெயரால் பரிசளிப்பது மிக்க பொருத்தமென்றும், ஆதீனத் தலைவரவர்கள் செய்துவருந் தொண்டு நாட்டிற்கு நலம் பயக்குமென்றும், மாணவமாணவியர் திரளாக இப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் பெற்ரோர்களும் இந்நிகழ்ச்சிக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும் உரைத்தார்கள்.

அடுத்ததாக திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள் "திருவெம்பாவைத் திருக்குறிப்பு" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில், திருவெம்பாவை மாணிக்கவாசகரால் திருவண்ணு மலையில் பாடப்பட்டதென்றும், மார்கழி மாதத்தில் வைகறைப் பொழுதில் நீராடி வழிபாடியற்றிய கன்னியர் நிலையாக இத் திருவெம்பாவை அமைந்துளது என்றும், ஒழுக்கமும், தெய்வ பக்தியும் மக்களிடத்தில் மிளிரவேண்டுமென்பதை இப்பாடல் கள் குறித்துக்காட்டுகின்றன என்றும் குறிப்பிட்டார்கள்.

பின்னர் தலைவர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. ஒரு பவுனில் அமைக்கப்பெற்ற தங்கப் பதக்கத்தை முதலாவ தாகத் தேறிய செல்வி, R. மீனுட்சிக்கும், அரைப் பவுனில் அமைக்கப்பெற்ற தங்கப் பதக்கத்தை இரண்டாவதாகத் தேறிய செல்வி, L. இந்திராவிற்கும் அளிக்கப்பட்டது. மற்றும் நால் வர்க்கு ஊக்கப்பரிசாகப் புத்தகங்சள் வழங்கப்பட்டன. ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் அனைவர்க்கும் நன்றி நவின்ருர்கள். பரிசுபெற்ற மாணவியர் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

## திருவள்ளுவர் நினைவுநாள்

13—3—54 மாலை 6 மணியளவில் விழாத் தொடங்கியது. உயர்திரு. A. கஜபதி நாயகர் M. L. C. அவர்கள் தலைமை வகித்தார்கள். ஷை நிலையத் திருமுறைவகுப்பு மாணவியர் கடவுள் வணக்கம் பாடினர். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினுர்கள். தலைவரவர்கள், திருவள்ளுவர் தமிழ்நாட்டின்

409



ஒப்பற்ற தலைவரென்றும், உலகமேதையென்றும், மக்கள் உணர்வையெல்லாம் ஒன்றேமுக்காலடியில் அளந்துவிட்டார் என்றும், அருமையான கருத்துக்களை எளிமையான குறட் பாவிலே அடக்கிக் காட்டுகிறார் என்றும், இத்தகைய வள்ளுவர் சென்னையைச் சேர்ந்த மயிலாப்பூரில் வாழ்ந்து இறைவன் திருவடி எய்தினார் என்றும், அதற்குச் சான்று திருவள்ளுவர் கோயில் மயிலாப்பூரில் அமைந்ததே என்றும், மக்கள் மக்களாக ஏன் தெய்வ நிலையில் வாழ்வதற்கு வள்ளுவர் குறள் வழி வகுக்கிறதென்றும் கூறினார்கள்.

பிறகு "வள்ளுவர் கூறிய கல்விப்பயன்" என்ற தலைப்பில் சொற்பொழிவுப் போட்டி நடைபெற்றது. சென்னைக் கல்லூரி களிலிருந்து மாணவர்கள் எழுவர் போட்டியில் கலந்துகொண் டனர். ஒவ்வொரு மாணவரும் ஏழு மணித்துளிக்கு மிகாமல் பேசினர். கடவுள் வாழ்த்து, கல்வி, கல்லாமை என்ற அதிகாரங்களையும், மற்ற அதிகாரங்களில் காணப்பெறும் குறட்பாக்களையும் துணைகொண்டு பேசினர். வாலறிவன் தாள் தொழுதல், அஞ்சவேண்டியதற்கு அஞ்சுதல், அடக்கமுடையரா யிருத்தல், எப்பொருளிலும் உண்மை காண்டல், அறிவை நல்ல காரியங்கட்குப் பயன்படுத்துதல் முதலியன கல்வியின் பயனும் என அறிவித்தார்கள்.

"திருக்குறளுட் சிலவும், திருத்தொண்டருட் சிலரும் என்பது பற்றிப் பெருஞ்சொல் விளக்கனர். திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள், திருக் குறளின் பெருமையையும், திருத்தொண்டர்களின் அருஞ் செயல்களையும் இணைத்துக்காட்டினார்கள். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவதிகைக்கடுத்த வடமடத்தில் துயிலுங்கால் வயதுசென்ற கிழவராக வந்த வேதியர் பலகாலும் சுந்தரர் முடியில் அடிவைக்கவும் சுந்தரர் பொறுமையோடிருந்த தன்மை,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பன் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கா லென்.

என்ற குறட்கு இலக்கியமா யமைந்துளது எனவும்,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்ற குறட்கு இலக்கியமாய்த் திருநீலகண்டர், சிறுத் தொண்டர் முதலிய தொண்டர்கள் வாழ்ந்தார்கள் எனவும் எடுத்துக்காட்டி விளக்கமுறப் பேசினார்கள்.

அடுத்ததாகக் திருக்குறள் பேச்சுப்போட்டியில் தேறிய மாணவர்கட்குத் தலைவர் திரு. A. கஜபதி நாயகரவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். தகுதிபெற்ற முதல் மூவருக்கு உயரிய தமிழ்ப் புத்தகங்களும், மற்றவர்கட்கு ஊக்கப் பரிசாகச் சில தமிழ்ப் புத்தகங்களும் வழங்கப்பட்டன. முதற்பரிசு பெற்றவர் விவேகாநந்தர் கல்லூரி மாணவர், G. திருமலை, இரண்டாம் பரிசு பெற்றவர் ஜெயின் கல்லூரி மாணவர் B. C. பாலசுப்பிர மணியம், மூன்றும் பரிசு பெற்றவர் ஜெயின் கல்லூரி மாணவர் K. சுப்பிரமணியம். முடிவில் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் பாராட்டி நன்றிதெரிவித் தார்கள். ஷ நிலையத் திருமுறை வகுப்பு மாணவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

## பெரியபுராண விரிவுரை

**7—3—54** ஞாயிறு மாலை 6 மணிக்கு அமர்நீதி நாயனார் வரலாறுபற்றி வித்துவான் திரு. R. சக்கரபாணி நாயகரவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள். நிகழ்த்துகையில் அமர்நீதிநாயனார் சோழவளநாட்டில் பழையாறை என்னும் பழம்பதியில் வணிகர் குலத்தில் தோன்றி பொன், மணி முதலியன வாணிகஞ்செய்து வந்தாரென்றும், சிவனடி மறவாத தொண்டர்கட்கு ஆடை, கோவணம் கொடுத்து வளம்பட வாழ்ந்தார் என்றும், அடியவர் பெருமையை அகிலத்திற் குணர்த்தவே ஆண்டவன் கோவணக் கள்வராய் வந்தாரென்றும், "சமன்செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்து ஒருபாற் கோடாமை சான்றோர்க்கணி" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்க்கை நடத்தியதால் துலாக் கோலே விமானமாகி அடியவரின் பெருமையை விளக்கும்படி யாகத் திருவருள் கூட்டியது என்றும் அறிவித்தார்கள்.

**14—3—54** ஞாயிறு மாலை 6 மணிக்கு எறிபத்த நாயனார் வரலாறுபற்றி, தவத்திரு அமிர்தானந்த யோகியாரவர்கள் சொற்பெருக்காற்றினார்கள். அவர்கள் குறிப்பிட்டதாவது

HII



சோழ அரசர்களின் தலைநகரங்களில் ஒன்றும், முடி கவிக்கும் பெருமை வாய்ந்ததுமான கருவூரில், எறிபத்த நாயனார் தோன்றினார் என்றும், அவ்வூரில் அமைந்துள்ள ஆனிலை அரனாருக்குப் பூமாலை புனைந்து சாத்திப் புண்ணியத் தொண்டாற்றியவர் சிவகாமியாண்டாரென்றும் வைகறைத் துயிலுணர்ந்து புனல் மூழ்கி வாய்கட்டிப் பூக்கொய்து கொணர்ந்த பூங்கூடையைச் சோழ அரசன் பட்டத்து யானை சிதறும்படிச் செய்தமையால் அவ் யானையையும் பாகர்களையும் வெட்டி வீழ்த்தினார் எறிபத்தர் என்றும் அடியவர்கட்கு வரும் இடையூறுகளை எறிந்து வாழ்ந்தமையால் எறிபத்தர் என்ற திருப்பெயர் பெற்றார் என்றும், அடியவர்கட்கு அடங்கி வாழ்ந்தார்கள் அரசர்கள் என்பது புகழ்சோழர் எறிபத்த நாயனாரிடத்து நடந்துகொண்ட முறையால் விளங்குகிறது என்றும், விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

**21—3—54** ஞாயிறு மாலை 6 மணிக்கு "ஏனாதிநாத நாயனார்" வரலாறுபற்றி கயப்பாக்கம். திரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். ஆற்றுகையில், சோழவளநாட்டில் எயினனூர் என்றபதியில் சான்றார் குலத்தில் அவதரித்தவர் ஏனாதிநாத நாயனாரென்றும்; வாட்படை பயிற்றுந் தொழிலாற்றி அத்தொழிலால் வரும் வளத்தை அடியவர்கள் வாழ்விற்காக்கி வாழ்ந்தாரென்றும், வாட்படைத் தொழிலில் வளங்காணாத அதிசூரன் (பொறாமைகொண்டு) போர்முறையால் இவரை வெல்லமாட்டாது வஞ்சனையால் வெல்ல நினைத்து அதன்படியே போரில் நீறணிந்த நெற்றியைக் காட்டினான் என்றும் சிவவேடங்கண்ட நாயனார் எதிரியை சிவத்தொண்டராகக் கருதினாரென்றும், பேரிடையூறு வந்த காலத்தும் வேடத்தின் பெருமைகாத்தல் என்ற இலட்சியத்தைக் கைக்கொண்டு வாழ்ந்தவர் ஏனாதிநாத நாயனாரென்றும் அறிவித்தார்கள்.

**28-3-54** ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'கண்ணப்ப நாயனார் வரலாறு முற்பகுதிபற்றிக் கயப்பாக்கம். திரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் பேசினார்கள். காளத்தி மலையைச் சேர்ந்தபகுதி அக்காலத்தில் பொத்தப்பிநாடு என்ற பெயருடன் விளங்கியது என்றும், அந்நாட்டில் உடுப்பூரில் வேடர் குலத் தலைவனாக விளங்கிய நாகனுக்கு மகவாய்த் திண்ணனார் என்ற

பெயருடன் கண்ணப்பர் அவதரித்தாரென்றும், இவரது வாழ்க்கை முற்பகுதியில், வேடர்கள் வாழும் முறைவிளக்கமாகத் தெரிகிறதென்றும், இவரது வாழ்வால் நாம் குழந்தை வளர்க்கும் முறையை நன்கு தெரிந்து கொள்ளலாமென்றும் சில விலங்கினங்களின் பண்பு தெரியக் கிடக்கிறதென்றும் விளக்கினூர்கள்.

4—4—54 ஞாயிறு மாலை 6 மணிக்குக் "கண்ணப்ப நாயனூர் வரலாறு பிற்பகுதிபற்றி திரு. செட்டியாரவர்கள் பேசுகையில், கண்ணப்பர் அன்பின் திறத்தை உலகுக்கு அறிவித்தவர் என்றும், கண்ணேயிமுந் தப்பியதால் கண்ணப்பர் என்ற பெயர் பெற்ருரென்றும். திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், ஆதிசங்கரர் முதலியவர்களால் பாராட்டப்பெற்ற பெருமை கண்ணப்பர் அன்பின் பெருமையை நமக்கு அறிவிக்கிறது என்றும், முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லேனல்லன்" என்ற அடியால் நாயனூர் பெருமையை நயம்பட எடுத்துக்காட்டி யுள்ளாரென்றும், அன்பு குறைந்து வாழும் நமக்குக் கண்ணப்பர் வரலாறு இந்தச் சமயத்தில் அன்பைப்பெருக்கி அமைதியளிக்குமென்றும் அறிவித்தார்கள்.


உ

## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

**ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.**

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P.O.

412

# தருமபுர ஆதீன சமயப் பிரசாரம்

13—3—54 மைலம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சந்நிதியில், தருமபுர ஆதீன சமயப்பிரசாரகர் திருக்கருகாவூர் திரு. மருள் நீக்கியார் 'முருகன் அருள்' என்பதுபற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

14—3—54 மாலை 5 மணிக்கு, தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் திரு. மருள்நீக்கியார் 'ஆலயவழிபாடு' என்பதுபற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

15—3—54 திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் திரு. மருள்நீக்கியார் 'நமது சமயம்' என்பதுபற்றி சொற்பொழி வாற்றினர்.

16—3—54 புள்ளிருக்கு வேளூர் தேவஸ்தானத்தில் திரு. மருள்நீக்கியார் 'தொண்டர் தமிழ்' என்பதுபற்றி சொற்பொழி வாற்றினர்.

19—3—54 புத்தூர் ஸ்ரீ புற்றிடங்கொண்டேசுவரர் தேவஸ்தானத்தில் திரு. மருள்நீக்கியார் 'முருகன் அருள்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர்.

20—3—54 தஞ்சை ஸீனியர் பாஸ்டர் ஸ்கூலில் மாலை 3-30 மணிக்கு திரு. மருள்நீக்கியார் 'ஞானசம்பந்தம்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

24—3—54 சாத்தனூர் ஸ்ரீ நித்யவிநோதீஸ்வர சுவாமி பெருஞ்சாந்தி விழாவில் திரு. மருள்நீக்கியார் 'கும்பாபிஷேக தத்துவம்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர்.

27—3—54 தஞ்சை பாஸ்டர் ஸ்கூலில் திரு. மருள்நீக்கியார் 'ஆலயவழிபாடு' என்றபொருள்பற்றிப் பேசினர். மாணவர்கள் சிவபுராணப் பாராயணம் செய்தார்கள். உதவி ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் தருமபுர ஆதீனத்தில் தமது மாணவர்கட்கு செய்யும் பேருதவியைப்பற்றி பெரிதும் பாராட்டிப் பேசினர்.

414

# மதிப்புரைகள்

## திருவாய்மொழி வாசகமாலை:-

தஞ்சை சரஸ்வதிமால் பதிப்பு விலை ரூ. 6—0—0.
கிடைக்குமிடம்: கௌரவ காரியதரிசி, தஞ்சை சரஸ்வதி மால் தஞ்சை. பக்கங்கள் 400.

உலகத்தில் எல்லாப் பொருள்களிடத்திலும் விஷ்ணு வியாபித்திருக்கிறார். அதுபோலத் திருவாய் மொழியின் முதற் பாசுரத்தின் பொருளே திருவாய்மொழி முழுதும் வியாபித் திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தும் நூல். திருவாய் மொழியில் நனவிலும் கனவிலும் தோய்ந்து தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள் தான் இத்தகைய பெரிய காரியத்தில் ஈடுபட முடியும். இந்த விவரணத்தைச் செய்தவர், அடிமை செய்தாள் திருக்கோநேரி தாஸ்யை.—இன்றும் ஏன் என்றுந் தான் பெண்களாலேயே மத சம்பிரதாயங்கள் காப்பாற்றப் பட்டு வருகின்றன என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

மிகத் திருத்தமான அழகான பதிப்பு. இதனை இவ்வளவு அழகுபடுத்தியவர்கள் நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாசாரியார் அவர்கள். இவர் எழுதிய முகவுரை இந்நூலுக்கு ஒரு சாவிபோல. அடிக்குறிப்பு தேவைக்குத் தக்கபடி அமைந்துள்ளது. ஆராய்ச்சிக்குறிப்புக்களும் அரும்பதமும் மிகஉபயோகமானவை. எல்லாவகையிலும் சிறந்த பதிப்பு இது.

## திருச்செந்தூர்க் கோயில் வரலாறு:-

தேவஸ்தான வெளியீடு. எழுதியவர்:- சைவபுராணிகர். திருவாளர். ச. முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்கள். விலை ரூ. 1. பக்கங்கள் 88.

திருச்செந்தூர் சிறந்த யாத்திரைத் தலம். கலியுக வரதர் கந்தருடைய படையிருப்பிடங்களில் ஒன்று. இத்தலத்தின் உண்மைகளைச் சிறந்த துணையின்றி அறிந்துகொள்ள முடியாது. அதற்குத் தம் அறிவால் துணை தருகின்றவர் முற்கூறிய ஸ்ரீமான் பிள்ளை அவர்கள். எல்லாவகையிலும் சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பு. மக்கள் பெற்று பயன் பெறுவார்களாக.

HIS



## இறைவனின் உறைவிடங்கள் :-

எழுதியவர் காளத்தி ஸ்ரீ நடேசமுதலியார். நடராஜா கல்விக்கழகம் திருவல்லிக்கேணி சென்னை. விலை ரூ, 2—0—0. பக்கங்கள் 175.

கண்கவரும் அழகான பதிப்பு. பல தலங்களின் படங்களோடு கூடியது. பாடல்பெற்ற பல சிவஸ்தலங்களுடைய வழி வரலாற்றுக் குறிப்புகளுடன் தரப்பெற்றுள்ளன. யாத்ரீகர்களுக்கு சிறந்த துணை.

## மருத்துவக்குடி வாக்ய பஞ்சாங்கம் :-

எப்படிப் பலபல பெயர்களுடன், பலபல விதமாகப் பத்திரிகைகள் மனதை வசீகரிக்கின்றதோ, அதுபோலவே பஞ்சாங்கத்திலும் பலவிதம் வந்துவிட்டது. அதில் மக்கள் விழிப்புடன் பார்த்து வாங்கவேண்டும் என்பதற்காகத்தான் "ஒரிஜனல் மருத்துவக்குடி பஞ்சாங்கம்; போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்," என்றெல்லாம் மேலட்டையில் பொறிக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. ஆகவே அதைப்பார்த்து மக்கள் ஏமாறமாட்டார்களல்லவா? G. S. V. என்ற ரப்பர்ஸ்டாம்பும் அட்டையிலிருக்கிறதா என்றும் பார்த்துக் கொள்ளவேண்டும். விலை அணு 0-5-6.

கிடைக்குமிடம்:- வெங்கடேஸ்வர் புக்டெபோ,
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

## திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி ஆண்டு அறிக்கை: (1953—54).

வழக்கம்போல கல்லூரி வளர்ச்சியைப்பற்றிப் பல தலைப்புக்களில் சிறந்த குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன. பிற்சேர்க்கையாக ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய நூற்று நாற்பத்தாறு அறக்கட்டளைகளின் தெளிவான குறிப்பு தரப்பெற்றுள்ளது.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(ஜய-ஞு சித்திரை-மீ 1-உ முதல் 30-உ முடிய)
(13—4—54 முதல் 13—5—54 முடிய)

## 1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதி நான்கு பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் பரணி முதல்பாதமும் நித்ய மங்களமாயும் தெய்வ சக்தியோடும் தொழில் லாபம், கீர்த்தி, நஷ்டதனவரத்து உத்யோக, மேன்மை சுபசந்தோஷ சமாசாரம், அடிக்கடி சஞ்சாரபலன், பந்துமித்திராளுடைய சேர்க்கை, நூதன வஸ்திராபரணசேர்க்கை முதலிய சுபபலன்களும், பரணி 2, 3. 4. பாதங்கள் மிசிரமாயும் வீண் நஷ்டங்கள் அபவாதங்கள் தேவகோபம் வியாதிபயம் அபமிருத்துயு பயம் காலிகன்று வாஹனக்குறை சத்துருபாதை முதலிய பலன்களாகவும் நடக்கும். தெய்வபலமும் ஒதுங்கி நிற்கும். சனி செவ்வாய் அசுபமாயும் புதன் சுபமாகவும் காணப்படும்.

## 2. விருஷபம்: கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை மூன்று பாதங்களும், ஆரோக்கியத்தையும் சந்தோஷத்தையும் செய்யும். ரோஹிணி நான்குபாதமும் மிருகசீரிஷம் 1, 2 பாதமும் வியாதியையும் நஷ்டத்தையும் பயத்தையும் உண்டுபண்ணும். வியாபாரிகள் நஷ்டமடைவார்கள். தொழிலாளிகள் வேலை அகப்படாமல் சிரமப்படுவார்கள். படித்தவர்களும் வேலை இல்லாமல் அலைவார்கள். தெய்வபலத்தை நாடினுல் நலனடையலாம். வெள்ளியும் புதனும் சுபம்தரும்.

## 3. மிதுனம்: மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை. புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீரிஷம் பின்னரையும் திருவாதிரை 4 பாதமும் சென்ற மாதம்போலவே நடக்கும். உத்யோக லாபமும் தொழில்

417



விருத்தியும் மேலோர் பெரியோர்களால் நன்மை அடைதலும் மனதுக்கு சந்தோஷமும் உண்டாகும். புனர்பூச நக்ஷத்திரம் மூன்று பாதமும் கஷ்ட நஷ்டங்களையும் ரோகத்தையும் புத்திராதிகளால் துன்பங்களையும் உண்டுபண்ணும். மனம் சாந்தம் அடையாமல் தொல்லைகளையே அநுபவிக்கநேரும். சனிக்கிழமை அசுபமாயும் வியாழன் சுபமாயும் நடக்கும்.

4. கடகம்: புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் நாலாம்பாதம் மிசிரமாய் நடக்கும். மாதமத்தியில் வியாதி பீடையும், நஷ்டமும் ஏற்படும், பூசம் நான்கு பாதங்களும் சரியாய் இராது. துஷ்ட சஹவாசம். துர்புத்தி நாஸ்திகம் வீண் செலவுகள் அபவாதம் களத்திர புத்திராரிஷ்டம் பெரியோர் கோபம் முதலியவைகள் நடக்கும், ஆயில்யத்துக்கு நான்கு பாதங்களும் சுபத்தையும் லாபத்தையும் தரும். தெய்வபலம் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. ஸிம்மம்: மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகம் நான்கு பாதங்களும் எதிர்பாராதபடி விஜயத்தையும் லாபத்தையும் சந்தோஷத்தையும் தரும். பூரம் மாதமத்தியில் சுபமாகவும் முன்பின் அசுபமாகவும் நடக்கும். உத்திரம் முதல் பாதம் உத்யோகலாபம், பெரியோர் கோபம், தூரயாத்திரை, கீர்த்தி முதலிய சுபத்தையே கொடுக்கும். புதன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி: உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரம் மூன்று பாதங்களும் ஹஸ்தம் முதல் பாதமும் ஜயபேரிகை அடித்துக்கொண்டு விசேஷமான சுப சந்தோஷங்களைத் தரும். எல்லா வகுப்பாரும் சுபமடைவார்கள், ஹஸ்தம் 2, 3, 4, பாதங்கள் ராஜாங்கத்தாலும் பெரியோர்களாலும் நன்மை ஏற்படும். பெரிய பிரதிஷ்டாதி யக்ஞ பலன்கள் கிடைக்கும், ஆத்மசமான மனுஷ்யாளுக்கு அசுபத்தைதரும்,

தெய்வ பலம் பிரகாசிக்கும். தொழிலாளிகள் உத்தியோகஸ்தர்கள் வியாபாரிகள் எல்லோரும் நலனடைவார்கள். சித்திரை முதல் இரண்டு பாதமும் ராஜாங்கத்தால் வெற்றி பத்திரமும் சத்துரு சரண் அடைதலும், நஷ்டதன பிராப்தியும் இஷ்ட தேவதா அனுக்கிரஹத்தால் குடும்ப மேன்மையும் புத்திராதிகளால் லாபகரமும் ஏற்படும். வெள்ளி சனி சுபவாரமாகும்.

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

விசாகத்தைத்தவிர மற்ற இரு நக்ஷத்திரபலன் பூரா பாதங்களும் அதிக சந்தோஷகரமாய் நடக்கும். தனதான்ய விருத்தி, உத்தியோகலாபம் கடன் நிவாரணம் சத்துருநாசம் எல்லாம் சுலபமாய் நடத்தல் மனதுக்கு சந்தோஷம் இவைகள் நடைபெறும். விசாகத்தின் மூன்றுபாத பலனும் எழுத முடியாதபடி அசுபத்தையே விசேஷமாய்தரும், தெய்வபலம் இருந்தால் சுபமடையலாம். புதனும் வியாழனும் மத்தியபலனாக நடக்கும். சனி செவ்வாய் சுபமாகும்.

8. **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் 4-ம் பாதமும் அனுஷம் பூராவும் லாபநஷ்டங்கள் சமமாகும், குடும்ப கலஹமும் தொல்லைகளும், அபஜயமும் கிரிமினல் கேஸ்களும் உண்டுபண்ணும். கேட்டை நான்கு பாதங்களும் சுபசோபனாதி மங்கள காரியங்களையும் ஜீவன லாபத்தையும் தரும். புதன் சனி சுபவாரமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் நான்கு பாதங்களும் சென்ற மாதம்போலவே நடக்கும். பூராடம் நான்கு பாதமும் உத்திராடம் முதல் பாதமும் தூரயாத்திரை சுபசோபனாதிகள் மூலம் அதிக செலவுகள், பெரியோர் ஆசிகிட்டுதல், தெய்வபலம் பிரகாசித்தல்

குடும்பமேன்மை, தொழில் லாபம் முதலிய சுபங்களே நடைபெறும். சனி, செவ்வாய் நலன் தரும்.

10. மகரம்: உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

மகரராசி சம்பந்தப்பட்ட நக்ஷத்திரங்கள் பூராவும் விசேஷ சௌக்கியத்தையே செய்யும், உத்தியோகலாபம் சென்ற இடம் எல்லாம் சிறப்பு, மேலோர் அன்பு, சஞ்சாரபலனால் விசேஷ கீர்த்தி, தெய்வபலம் பிரகாசித்தல் சகல காரியங்களும் வெற்றியடைதல் முதலிய சுபங்கள் நடைபெறும். எல்லாவிதத்திலும் கீர்த்தி ஏற்படும், திங்களும் புதனும் சந்தோஷமாகும்.

11. கும்பம்: அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டம் மிசிரமாய் நடக்கும். சதயம் மத்தியபாகத்தில் லாபம்தரும். பூரட்டாதி முக்காலும் இல்லற சுகத்தையும் தனதான்ய லாபத்தையும், மங்கள காரியத்தையும் தந்து சந்தோஷமுண்டாக்கும். புதன் வியாழன் நலன் தரும்.

12. மீனம்: பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசி சம்பந்தப்பட்ட நக்ஷத்திர பாதங்கள் பூராவும் கஷ்துத்தில் உள்ளபடியே எதிர்பாராத சந்தோஷத்தையும் வெற்றியையும் தரும். தொழில் ஓங்கும், சுபகாரியங்கள் மூலம் விசேஷ செலவுகள் ஏற்படும். அடிக்கடி சஞ்சாரபலன் ஏற்பட்டு அதில் மேன்மையையும் கீர்த்தியையும் தரும். சத்துரு சரண் அடைவான். தெய்வபலம் ஓங்கும், கஷ்டங்கள் பூராவும் மாதக் கடைசியில் நீங்கி சுப சந்தோஷத்தைத்தரும்.

நித்யமங்களம் உண்டாகுக.

---

ஆறெருடு மூன்றதாகி யந்தமா லிங்கந்தன்னைப்
பேறதுவாக வெங்கும் பேரொளி யாகவேதான்
வேறுபாடில்லாவன்பர் வெளியினே டொளிதானுயே
மாறுபாடின்றி நிற்பின் மரிப்பொடு பிறப்புமின்றே. 42

மண்முத ஞன்குபூதம் வானுற வாழுமாபோ
லெண்ணிய வேகலிங்க நிட்டையா லெங்குமாக
நண்ணிட நிறைந்து நின்று ஞானவா னந்தமான
புண்ணியர் பெருமை தன்னைப் புவியிலார் புகலுவாரே. 43

வாக்கொடு மனமிறந்த வடிவிலா லிங்கந்தானுய்ப்
போக்கொடு வரவுமின்றிப் புறம்பொடு பக்கமின்றி
நீக்கம தின்றி யெங்கும் நிறைந்தமா லிங்கத் தின்பந்
தேக்கிட வனுபவிப்பார் செகத்தினிற் பிறவாரன்றே. 44

அங்கசுக லிங்கமென வாதியிடுமன்பர்
லிங்கசுக வங்கமென நேர்தருவதாக
வங்கமொடு லிங்கமது வாயிருவ ரற்று
லெங்கும் வெளியான சிவமெய்தியது வாவர். 45

இட்டலிங்கந் தான்றூல மிதுசிலை ஞானமாமோ
திட்டமாய் வீரசைவந் தெளிந்தவர் சேரார்சேரார்
முட்டரா மாந்தரிந்த முறைமையை யறிந்துதேருர்
மட்டதாந் தூலங்கொண்டு மரிப்பொடு பிறப்பிலாழ்வார்.

தூல சடுத்தலம் முற்றும்

இனி சூக்கும சடுத்தலம் வருமாறு:— அது பரம் ஆன்மா மனம் புத்தி சித்த மாங்காரம் ஆறுமாறுதலமாய் மகாலிங்கத் திலயிக்கமாய் நிற்குமுறைமை.

சாற்றிய சடுத்தலந்தான் றூலமாஞ் சூக்குமத்தா
லேற்றிய சடுத்தலந்தா னிசைந்தவக் கரங்களாறும்
ஆற்றவா காயம்வாயு வனலங்கியப்புமண்ணுந்
தோற்றிய வடைவே யின்னஞ் சொல்லுது மயிக்கமாதல்.

ஆதிடு...தல வத்துவவன இலங்களிலாத முனஞ்
சோதிபரஞ் சுடராகித் தோன்றுருவங் நாமமிலா
நாதனவனக்காலம் நானகிலம் படைப்பனென
நீதியினாலருவமதாய் நிகழ்ந்துருவும் பெயருமுறும். 48

பரம் பிரமமெனப் பெயராய்ப் பராபரமாயதி லுண்டாம்
பரம் பிரமம் குளமாகிப் பருகியவக் குளத்தினிடை
யுரம்பெறவே யான்மா வென்றுயர் தலமதாகிப் பின்
றிரம்பெற வத்தலங் குளத்திற் சேர விருவகையாகும் 49

இந்தவகையான நெறியெப்படி யதென்னில்
அந்த மனவாக்கினொடு மன்னவரிதான
வெந்த பரஞான மதி லெய்தியிடு சீவன்
அந்த வகையாகிய வருங்கரணம் நாலாம். 50

ஆங்காரஞ் சித்தம் புத்தியா மனஞ்சீவன் ஞானம் -
பாங்காகும் ஞானந்தானே பரிவொடுந் தலமதானாய்
ஓங்கார மாறெழுத்தா யுலகெலாம் படைத்தளித்து
நீங்காம னின்றுபோகம் நிகழ்த்தியே பொசிக்குந்தானே. 51

ஓங்காரமான ஞானமொள்ளிய வயிக்கமாகும்
பாங்கானாய் நிகழுமாறு பகர்தரு யகாரஞ்சிவ
னீங்கா வாகாரஞ் சித்தம் நினை சிகாரந்தான் புத்தி
யாங்கார மகாரமாகுமம்மன நகாரந்தானே. 52

பரமுயிர் மனம்புத்தி பண்புடன் சித்தாங்காரங்
கரவிலவ்வறுவர் தங்கள் கருமமதொழிந்தாலன்றி
உரமுறு மனமும் வாக்குமோய்ந்திடப் பிரமமாகார்
விரவிய தலங்களாறும் விரித்தவாறொடுக்கஞ் சொல்வாம்.

பாகமிக மேவின்மிகுபண்பில்குண மோகஞ்
சோகமிகு கீழ்மைபல சொல்லரிய வாசை
யாகமகி லாங்கார மானபல வற்றாற்
போகமிகு பத்திவழி போந்திடு வரன்பர். 54

பெத்தமொடு முத்திநெறி பேசுவழி யன்றி
மெத்தமயல் கொண்டுலகின் மேவியிடு போகஞ்
சித்தமது றுந்துயர்கள் சேரவென வந்த
மத்தமத மற்றவர் மகேசரென வாவர். 55

... ... ... களான வருமையை யறிய
... கிறபவத்தை மேவிப் பிறப்பினே டிறப்பைநல்கப்
பொருந்திய புலன்களொடு புந்திசேர் குணங்கள்கெட்டாற்
றிருந்து பிரசாதியாகிச் சேர்தல மாகுமன்றே. 56

ஐயமுஞ் சனனந்தானு மணிமணி யாகக்கொண்டே
பொய்யதே யுரைத்துநின்று பொசித்திட நோக்கியெங்கு
மையல்கொண்டிங்கு நின்ற மாமனமயக்கமாய்ந்தாற்
பையவே பிராணலிங் ... ... ... ... ... ... 57

கண்டன வுபாதியேழுங் கருதியவவத்தைமூன்றும்
பண்டுதானென்றிருந்து பருகிய பாசமெல்லா
முண்டெனுங் குணங்கள் சீவ னொழிந்துபின றிவாய்நின்று
லெண்டிசை நிறைந்து நின்ற வியல்புடைச் சரணனுவான்.

காரணவுபாதியோடு கலந்துதான் கழன்று நின்றே
யேரணவறிவுதானு மிசைந்திரண்டின்றி யொன்ருய்ப்
பூரண வடிவமாயே புணர்வற லெங்குநின்ரு
லாரண முடிவுரைக்கும யிக்கனென் ருகுமாறே. 59

அறுவகைத் தலங்கடானு யனைத்துமா யகண்டமாகிப்
பெறுபய னுளதாயந்தப் பேறது மருந்திநின்றே
யுறுபொரு ளுணர்ச்சியாலே யோதறு தலங்களெய்தித்
திறமுட னென்ருேடொன்று சேர்ந்துமுன்போலதாமே. 60

ஆக்கிய சடுத்தலங்க ளானவா றடங்கியாங்கே
வாக்கொடு மனமிறந்த மன்னுமப் பிரமமாயே
போக்கொடு வரவுமின்றிப் புறம்பொருள் பக்கமின்றித்
தாக்கரிதாகிநின்று தான்பரிக் கின்றவாறே. 61

ஓங்கிய பிரமந்தன்னி லுதித்துநின் ருெடுங்குமந்தத்
தீங்கிலாச் சடுத்தலத்தின் செய்தியை யெடுத்துக்காட்டிற்
பாங்கினுற்பஞ்ச பூதம்பரத்திடை யுதித்துநின்றே
வீங்கிய வுலகமாக விரிந்துபி னொடுங்குமாறே. 62

வெளிதனில் வாயுவங்கி வேறிலாத் தோயமண்ணுய்க்
களிதரு கடினமாகிக் கரந்துபின் ககனமாபோ
லொளிதிகழ் பரமேசிவ னுணர்ந்திடு கரணநான்கு
மளிதரு முருவமாகி யருவமாயமல மாமே, 63

அற்புதா காசந்தானு மருவமதா யிருந்துஞ்
சொற்பெறு முபாதியாலே தோன்றிநின்றனேகமாகப்
பிற்படு முபாதிபோனாற் பெருவெளி யொன்றுனாற்போற்
சிற்பரானந்தலிங்கச் செய்தியு மாகுமாறே. 64

வாரிதான் றிரண்டுகல்லாய் வாரியே யாகுமாபோற்
சீரியலாகிநின்று சிறந்த மாலிங்கந்தானே
பேரிய வுலகமற்றும் பேதாபேதங்களாகி
வீரியத்தோடு தானாய் மிகவிளையாடுமாறே. 65

அப்பினு லுப்பதாகி யவ்வுரு வமர்ந்து நின்றே
யப்புடன் கூடுமுப்புமப்பென வமருமாபோற்
செப்புமா லிங்கத்தாலே செகமெலாம் சிறந்துதோன்றி
யொப்பிலா மாலிங்கத்தி லொடுங்கு மச்சகமனைத்தும். 66

கடகமதொடிந்தபோது கனகமதென்றுசெப்பும்
கடகமே கனகமென்று கருதிடவறியார்போலத்
திடமுறு வீரசைவத்திறமது தெரிந்துதேரார்
படலமா மாயை மூடிப் பலபிறப்புழல்வரன்றே. 67

மாயைதா னேதோ வென்னின் மனமாகு மனந்தான்வாயு
வாய்நல வாயத்தானே யதன்வடி வாகிநின்று
காயநன் னெறிகளெல்லாம் கலங்கிட மயிக்கஞ்செய்யும்
வாயுவை வென்றபேர்கள் மாலிங்க வடிவமாவர். 68

மனம் விரிந்து குவிந்தது மாதவ
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்து குவிந்தது வாயுவு
மனம் விரிந்து குவிந்துரை மாண்டதே. 69

எனவரு மியல்பினாலு மெண்வகை யங்கத்துள்ளு
முனவரும் பிராணாயாம முயந்திடு மங்குமாகத்
தனதெனும் யோகத்திற்குத் தானது சித்தியாக்கி
மனமதை யடிக்கவல்லார் மாலிங்க வடிவமாவார். 70

இறப்பொடு பிறப்புமில்லா ரின்பதுன் பங்க ளில்லார்
மறப்பொடு நினைப்புமில்லார் மனமயல்மருவ வில்லார்
உறக்கமொடுணர்ச்சி யில்லா ருலைவொடு மொழிவுமில்லார்
திறப்பட வீரசைவ ஞானத்தைத் தெளிந்து ளோரே. 71

அப்படிவீரசைவ ஞானத்தை யறிந்த நல்லோர்
மெய்ப்படவிட்டபோகம் விரவினும் விரவாராவ
ரொப்பிலாப்பிரமந்தானே யுலகமாயிருத்தல்கண்டு
கப்புறமாயையென்று கருதிடாரது பொய்யென்றே. 72

நவலிங்கலீலை முடிந்தது.

இவ்வாறு வீரசைவர் கூறும் பிறநூலினெருலிங்கமே யிட்டப் பிராணபாவ பேதத்தான் மூன்றுலிங்கமாய் அந்த மூன்று மாசாரலிங்கங் குருலிங்கஞ் சிவலிங்கஞ் சங்கமலிங்கம் பிரசாதலிங்க மகாலிங்கமென ஆறாய்; அந்தவாறும் தத்துவ பேதங்களால் முப்பத்தாறாய் அவற்றினவாந்தரபேதத்தா லிரு னூற்றொருபத்தாறாய் வருமிலிங்க பேதமாம் எனவரும். அது,

ஒன்றுமூன்றுமோராறு மாகியோராறு முப்பதுமாகியே
யன்றியே யிருநூறு மொருபதினாறு மாகிய மர்ந்தபி
னின்ற முறையின தேகமாகி நிறைந்த லிங்கமதாகியு
மின்றுநின்றனை யெனதுகரமிசை யிட்டலிங்க மகேசனே.

என்னுமாற்றால் உணர்க. இந்த லிங்கபேதத்தோடு பிற வாற்றாற் கூறும் ஆறுவித சுரோதசுகளும் கடந்து நிற்பதே ஞானசமாதி என முற்கூறியதற்கு ஏற்கவும் வரும். அது,

அறுவகைப் பத்தி சத்தி யறுவகைக் கலைகள்முத்தி
யறுவகை யக்கரங்களறு வகையத்தம் நல்ல
அறுவகைச் சாதாக்கியங்களாறுடன் முப்பத்தாறு
யறுவகை யிருநூற்றோடு யொருபது மறிந்துமேலை
செறிவுரு நிரஞ்சனுதிக்குகைசெல்வோன்சமாதிசேர்வோன்.

எனவரும். பிறவும் விரித்துணர்ந்துகொள்க.

முன்னர்த் தக்கணமத மறுப்புக் கூறியதே யிதற்கும் பெரும்பான்மையுமொக்கும் என்க.

இனிச் சுத்தசைவம் சித்தாந்தத்தில் என்பது இத் துணையுஞ் சுத்தசைவமாஞ் சித்தாந்தத்திற்கு அகப்புறச் சமயமத மறுப்புமுணர்த்தி இனி அகச்சமய மதமறுப்பு

முணர்த்தத் தொடங்கி முதற்கண் அவ்வகச்சமயமித்துணைத் தென்கின்றது. ஈண்டு **அகச்சமயங்கள் பலவுளவாமெனினு** மென்றது சுவச்சந்தத்தில்,

इत्येवं वादिनां तेषां भेदानां तु शतत्रयम् ।
त्रिषष्ट्या चाधिकं चान्यद्वादिनां भ्रान्तचेतसाम् ॥
अज्ञानतिमिरान्धानामाजीवनकृदुत्तमम् ।

என்பதனால் முன்னூற்றறுபத்துமூன்றும் பிறவும் சமயபேதம் கூறுதலின். வேறு முளவாயினுமாக வென்றற்கு இனிப் **பனிக்கடல் சூழிவ்வுலகி லிங்கிப்போது பகர்வதுகேட்டுள சமைய** மென்றது...கேளாதன பிற வானவருலகின் வழங் கினும் வழங்கு மிங்கிலவுலகத்து மெல்லாமறிஞரறிக; யானறிந்தவளவிற் கூறுவலென்றற்கு,

शैवं पाशुपतं वामं भैरवं तु महाव्रतम् ।
कालामुखमिति ख्यातमन्तः समयषट्ककम् ॥

என வருமாறானுள் வாமபைரங்களை அகப்புறமாக முற்கூறி நின்ற நான்கனுள்ளும், சித்தாந்தசைவம் முதன்மையாகலின் மற்ற மூன்றினொடுங் காபாலமும் வைதிகபாசுபதமும் காருடாதி சைவமுங் கூட்டி யாறென்றது. அவ்வாறே வேறுபட வருந் தந்திரபேதங்களாயாகமங் கூறுதலின். அது சுப்பிரபேத முதலியவற்றில்,

शैवं पाशुपतं सोमं लाकुलं तु चतुर्विधम् ।
तेषु शैवं परं सौम्यं रौद्रं पाशुपतादिकम् ॥

எனவும், அதிலேயே சங்கரபடலத்தில்,

शैवं पाशुपतं सोमं लाकुलं तु चतुर्विधम् ।
तेषां भेदोपभेदाश्च तत्तच्छास्त्रैः समाचरेत् ॥
कर्षणादिप्रतिष्ठान्तमेकतन्त्रेण कारयेत् ।
भुक्तिमुक्तिप्रदं मुख्यं सर्वसिद्धिमवाप्नुयात् ॥

पूर्वमेकेन कृत्वा तत्पश्चादन्येन वै कृतम् ।
एतत्तु सङ्करं तेन राज्ञो राष्ट्रस्य दोषकृत् ॥
आचार्यस्यैव कर्तुश्च नाशनं त्वखिलं तथा ।

எனவும், வேறிடத்தில்,

शैवतन्त्रा इमे प्रोक्ताः शैवं पाशुपतं तथा ।
सोमसिद्धान्तकं चैव लाकुलं तु चतुर्विधम् ॥

எனவும் பிறவும் வருமாற்றானுணர்க.

तन्त्रं पाशुपतं चान्यत्पुराणं धर्मशास्त्रकम् ।

என்னும் காமிக வசனத்தால் அவைதிக பாசுபதம் வந்தவாறு.

गारुडं भूततन्त्रं च दक्षिणं वामतन्त्रकम् ।

என்னும் காமிக வசனத்தாற் காருடாதி சைவம் வந்தவாறு காண்க. மற்றனைத்தும் மேல் விளங்கும்.

அவ்வாறு காளாமுகமதமறுப்பு மாமாறு அரனுலகிற் கிறைபாச மென்பது கூறும். இம்மதமாமாறு சர்வசித்தாந்த விவேகத்தில்,

अथ कालामुखार्थस्तु सङ्ग्रहेण निगद्यते ।
स्फाटिकं कुण्डलं चैव रक्तचन्दनलेपनम् ॥
पुत्रदीप ... ... कालामुखस्तथा ।
इति लक्षणसंयुक्तैः सेव्यः कालामुखो मतः ॥
व्रतं कालामुखं प्रोक्तमे ... ... ...
प्रत्यक्षादीनि मानानि तत्र प्रागुक्तवर्त्मना ॥
पतिः पशुश्च पाशश्च प्रमेयस्त्रिविधो मतः ।
पतिः साक्षान्महादेवो रुद्र एव न भैरवः ॥

रुद्रांशेन विना तस्य न पृथक्त्वेन सम्भवः ।
तस्मादेवं महादेवो रुद्रोऽयं मूलविग्रहः ॥
स एव दक्षिणामूर्तिरूपादिबहुविग्रहः ।
साक्षात्सदाशिवो नित्यः शिव एव जगत्पतिः ॥
तद्भेदो बहुधा प्रोक्तस्तत्तत्कृत्यानुसारतः ।
पशुस्तु त्रिविधो ज्ञेयः प्रागुक्तेनैव वर्त्मना ॥
पाशं च मलमायादि मायेयं स्याज्जगद्ध्रुवम् ।
पाशबन्धनिवृत्त्यर्थं पशुभिः सेव्यते शिवः ॥
अष्टम्यां च चतुर्दश्यां शिवरात्रिव्रतेन च ।
सोमवारादिभिर्नित्यमन्यथोपायतः पुनः ॥
व्रतं कालामुखं प्रोक्तं शिवदीक्षापुरःसरम् ।
शक्तिपातानुसारेण कर्मसाम्येऽपि सम्भवे ॥
तथानुष्ठानसामर्थ्यादात्मा शुद्धो भवेत्तदा ।
आत्मा नक्षत्रवद्भाति शिवस्त्वर्क इव स्फुटम् ॥
तदात्मशिवसंयोगः परमोक्ष इति स्मृतः ।
इत्येवं संग्रहादुक्तो व्रतकालामुखो मतः ॥

என வரும். இது சோமசைவமென்பாருமுளர். நிராகரணம் வெளி. 2

3. * * *

## இனிக் காபால மதம்

அது பன்னு காளாமுகத்தி னென்பது கூறும். அது வருமாறு சர்வசித்தாந்தவிவேகத்தில்,

अथ कापालसिद्धान्तः कथ्यते संग्रहादिह ।
तत्कालामुखसंप्रोक्तमङ्गीकृत्य यथोचितम् ॥
कापालशैवतन्त्रं तु सेव्यते यत्कपालिभिः ।
महाश्मशाने संहारे नृत्यमानमहेशवत् ॥

428

பிற்சேர்க்கை:

# ரஸிகமணி; டி. கே. சி. அவர்களின்

## கடிதங்கள்

(தொடர்ச்சி)

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்
உ — தென்காசி
சிவமயம் — 18—9—53

ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் மகாசந்நிதானம் அவர்களுக்கு அனேக நமஸ்காரம்.

சந்நிதானத்தின் ஜன்மநக்ஷத்திரத்தை ஒட்டி அரிய வழிபாடுகளும் விழாக்களும் நடந்தேறியிருக்கிறது. அவைகள் காரணமாக நாடெங்கும் சைவ மணம் கமழுகிறது.

அரிய புஸ்தகங்கள் வெளியாகின்றன. சம்பந்தர் தேவாரம் இங்கிலாந்துக்கே போயிருக்கிறது. அங்குள்ள ஒருவர், மேல்நாட்டார்தான். அளித்த வரவேற்பு அழகாய் இருக்கிறது. அந்தவரவேற்புகாரணமாக இங்குள்ளவர்களுக்கு சைவப்பற்று அதிகமான உறுதிபெறலாம். சைவம் தழைக்க!

அடியேன் நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்
ஓம் — தென்காசி
23—10—53

தர்மபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு அனேக நமஸ்காரம்.

ஞானசம்பந்தம் புரட்டாசி மலரில் அரிய செய்திகள் கிடைக்கின்றன. சென்னையில் சமயப்பிரசார மண்டபம் நிறுவியிருக்கிறது. மிக்க அவசியம். தமிழ்நாட்டுக்கு அது ஒரு தாரகம்.

பிரமுகர்கள் வந்து அரிய விஷயங்களை ஆர்வத்தோடு பேசியிருக்கிறார்கள். மனசில்க்கிடந்த ஆத்திரம் வார்த்தைகளில் வெளியாகின்றன. சமயத்துக்கு பெருந்துணையாய் நிற்கிறது மண்டபம். எல்லாம் ஆதீனத்தின் பெயருக்கு ஒத்ததாய்த் திகழ்கிறது.

நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்
உ — தென்காசி
சிவமயம் — 17—12—53

ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் மகாசந்நிதானம் அவர்களுக்கு அனேக நமஸ்காரம்.

“ஞானசம்பந்தத்தின்” மூலம் சைவமணம் நாடெங்கும் கமழுவதாகத் தெரிகிறது. அடியார் கூட்டத்தில்க் கலந்து கொண்டால்ப் பேரானந்த நிலையில் நின்று திளைத்துக் கொண்டே போகலாம். இதைவிட வேறு ஆனந்தம் இருக்க முடியாது. எனக்குத்தான் கொடுத்துவைக்கவில்லை.

சென்னை சமயப்பிரசார நிலையத் திறப்புவிழா பற்றிய புஸ்தகம் கிடைத்தது. வெகு அழகாய் அமைந்திருக்கிறது புஸ்தகம். படங்கள் வெகு ரஸமாய் இருக்கின்றன. பேச்சுகளும் வாழ்த்துகளும் விழாவிலும் நிலயத்திலும் எவ்வளவாக நம்மவர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. நம்முடைய சமயகுரவர் நால்வருடைய ஆவிகளுக்கு எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும்! அவர்களுடைய திருவடிகளுக்கு வணக்கம்.

குற்றாலம், மழைவளம் அருவிவளம் எல்லாவற்றோடும் சுகமாக இருக்கிறது. மார்கழி உத்ஸவமும் நடராஜப் பெருமானுக்கு ஆரம்பணமாக தீபநடனமும் அழகாய் நடந்தேறிவருகிறது. பக்தர்களுக்கு ஒரே ஆனந்தக் காட்சி.

மிக்க பணிவுடன் அடியேன்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

மீனம்பாக்கம்
சென்னை
8—9—41

***ஆதீனத்தில் நடந்த சைவ மகாநாடுபற்றித் தமிழ்நாடு முழுதும் ஒரே உத்ஸாகமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தருமபுரம், மடம், கோயில்கள், ஆறு எல்லாம் சேர்ந்து அழகான புனிதமான காட்சி தருகிறது. எங்கும் கிடையாத காட்சிதான். வசதிகளும் மற்ற ஏற்பாடுகளும் ரொம்ப அருமையாக இருந்தன. வந்தவர்கள் எல்லாரும் ஒரேபடியாய் அதிசயித்து அதிசயித்துப் புகழ்ந்தார்கள். திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானியார் சுவாமிகளை வருகிற வழியில் பார்த்தேன். நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் சொன்னேன். ரொம்பவும் மகிழ்ச்சி கொண்டார்கள். தனக்கு உடம்பு அசௌகரியமாய் இருந்ததால்த்தான் வர இயலாமல் போயிற்று என்றும் சொன்னார்கள். சைவம் பொலிவு கொண்ட சபையைப் பார்த்து எவ்வளவோ அநுபவித்திருப்பார்கள்.

செட்டிநாட்டரசர் அண்ணமலைச் செட்டியாரவர்களையும் முந்தாநாள் சந்திக்க நேர்ந்தது. அவர்களிடமும் என்றும் இல்லாத சைவ மகாநாடு நடந்ததென்று விவரித்துச் சொன்னேன். அவர்களும் ரொம்ப சந்தோஷப்பட்டார்கள்.

நிச்சயமாகச் சொல்லலாம், தமிழுக்கும் சைவத்துக்கும் புத்துயிர் உண்டாய்விட்டது என்று. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் எவ்வளவோ சிரமம் எடுத்து மகாநாடு நடக்கும் போதெல்லாம் அலங்கரித்த சிறப்பை எளிதில் பாராட்டிவிட முடியாது.

# சொற்பொழிவுகள்

## தருமபுர ஆதீன ஆவணிமூலத் திருமுறைத் திருநாளில் பதினொராந் திருமுறையைப்பற்றி டி. கே. சி.

31—8—41

தமிழராகிய நம்மிடத்தில் எத்தனையோ அரிய விஷயங்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் ஆயிரக்கணக்கான வருஷங்

களாகப் பண்பட்டு வந்த நாகரிகத்தின் விளைவு; உலகத்தில் எங்கும் கிடையாதன என்று சொன்னால் மிகையல்ல. ஆனால் அவைகள் எப்படியோ புறக்கணிக்கப்பட்டு நம்மவரால் மதிக்கப் படாமல் இருக்கின்றன.

இந்த நிலையில் நல்லகாலம் பிறந்து ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய ஆஸ்தி என்று சொல்லக்கூடிய பண்பாட்டுகளுக்குப் புத்துயிர் உண்டாகி இருக்கிறது.

உதாரணமாக முப்பது வருஷத்துக்கு முன்பு, இந்த ஆதீனத்திலிருந்து இப்போது கூட்டியுள்ள இம் மகாநாட்டைக் கூட்டியிருந்தால் பிரமுகர்கள் எல்லோரும் ஆங்கில பாஷையிலேயே பேசியிருப்பார்கள். இன்றோ ஆங்கிலத்தில் பேச நாணுவார்கள். தமிழிலேதான் பேசுவார்கள். இது தமிழுக்கு ஏற்பட்ட மதிப்பு. இனி இது ஒரு புரட்சிதான்.

சென்ற முப்பது நாற்பது வருஷங்களாக. தமிழர்களாகக் கூடிக் கேட்கும் சங்கீதக் கச்சேரிகளில் எப்படியோ நமக்கு விளங்காத பாஷைகளில் பாடகர்கள் பாடிவந்திருக்கின்றார்கள். அதுகாரணமாகப் பாடல்களில் ஏதேனும் பாவமிருந்தால் அதைப் பாடுகிறவரும் உணருவதில்லை; கேட்பவர்களும் கவனிப்பதில்லை. ஆகவே, நம்முடைய சங்கீதக்கச்சேரிகளில்ப் பாடுகிறசங்கீதத்தில் உயிர் அற்றுப் போய்விட்டது. சங்கீதம் கேட்பதனால் உணர்ச்சி பாவம், பக்தி பாவம் ஒன்றும் உண்டாவதில்லை. மனதிலும் பதிவதில்லை. இதையெல்லாம் உணர்ந்து செட்டிநாட்டு அரசர், சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள், 'தமிழர்கள் கூடிய சபைகளில்த் தமிழ்ப் பாடல்களே பாடவேண்டும்' என்று கருதி அதற்காகப் பதினாயிரம் ரூபாய் வினியோகத்துக்காகவே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். நம்முடைய ஆதீனங்களும் இதற்கு வேண்டிய உதவியும் ஊக்கமும் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இதெல்லாம் காரணமாக வெகு சீக்கிரத்தில் தமிழ்நாடெங்கும் தமிழிசையே ஒலிக்கும் என்பதை உறுதி கட்டிச் சொல்லலாம். இது ஒரு நல்ல புரட்சி அல்லவா? இனி, ஒரே ஒரு விஷயம்.

தமிழும் சைவ சமயமும் சமீபத்தில் பண்பட்டுவந்த விஷயங்களல்ல. பதினாயிரம் இருபதினாயிரம் என்று சொல்லக்கூடிய

வருஷங்களுக்கு முன்பு, ஒரு சமய உணர்ச்சியும் ஒரு பண்பாடும் இமய மலையிலிருந்து கன்னியர்குமரி வரையும் பரந்து இருந்தது. தற்காலத்து ஆராய்ச்சியாளர்கள் அந்த நாகரிகமும் பண்பாடும் மற்ற இடங்களில் மறைந்து கிடந்தாலும், தமிழ் நாட்டில் இன்னும் துலாம்பரமாய்க் கிடக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அதற்குச் சான்று என் கையிலுள்ள புஸ்தகத்திலேயே இருக்கிறது. இந்த ஆதீனத்திலிருந்து வெளியிட்டிருக்கிற நால்வர் சரிதை என்னும் புஸ்தகத்தில் வெளியட்டையில் ஒரு குறிப்பு.

"கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்" என்று கண்டிருக்கிறது. இந்த பரம்பரைபற்றிய குறிப்பானது நம்மை இமய மலைக்கே கொண்டுபோய் விடுகிறது. அதோடு இருபதினாயிரம் வருஷத்துக்கு முன்னும் கொண்டுபோய் விடுகிறது.

நம்மிடத்திலுள்ள சாமான்ய ஆசாரங்களும், அனுஷ்டானங்களும், வழிபாடுகளும் மிகப் பழைய பண்பாட்டையே சுட்டிக் காட்டுகின்றன. அப்படியேதான் நம்முடைய சமய சம்பந்தமான பாடல்களும் பாடல்களுக்குரிய நம்முடைய இசைகளும் சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாக ஒரு செய்யுளை எடுத்துக்கொள்வோம். காரைக்காலம்மையார் ஏதோ ஆயிரம் அல்லது ஆயிரத்தைந்நூறு வருஷத்துக்கு முன்பிருந்த பெரியார். அவர் சைவத்திலும் தமிழ் இலக்கியத்திலும் திளைத்த அரிய கவிஞர். அவர் பேசுவதைக் கொஞ்சம் கேட்போம்.

சில வருஷங்களுக்கு முன்பு கிறிஸ்தவ நண்பர் ஒருவர் பைபிள் புஸ்தகத்திலுள்ள, "கடவுள் உன் இதயத்திலிருக்கிறார்" என்ற வாக்கியத்தை மிகவும் அனுபவித்துப் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார். "இதுபோலத் தமிழில் வாக்கியம் உண்டா?" என்று கேட்டார். அதற்கு, "இந்த உண்மையை நம்முடையவர்கள் நன்றாகச் சொல்லி இருக்கிறார்கள்; உண்மையில் திளைத்து ஆனந்தித்து ஆவேசத்துடனேயே அபூர்வமான கவிரூபமாக வெளியிட்டிருக்கிறார் காரைக்காலம்மையார் என்று சொன்னேன்.

சிவபெருமான் ஞானமயமாய் உள்ளவன். சகல வஸ்துக்களுக்குள்ளும் புகுந்து ஊடாடும் ஞானம் அவனுக்கே உரியது.

மேலும், எங்கும் நிறைந்த ஆனந்தமயமாயுள்ளவன் அவன். அவனுக்கோர் ஆசை உண்டாய் ஆணவத்துக்குள் புகுந்து ஆணவத்தின் சுகதுக்கங்களை அனுபவிக்கத் தலைப்பட்டான். இந்த எளிமைத் தத்துவத்தை நாம் பாராட்டி முடியாது. அதை நினைக்க நினைக்க ஒரே வியப்பில் நம்முடைய மனம் நின்று விடுகிறது. நம் முன்னோர்கள் இதைப் பாராட்டி விஷத்தையே உட்கொண்டான் என்று சொல்லி இருக்கிறார்கள். பாடி இருக்கிறார்கள். 'திருநீலகண்டன்' என்று இறைவனைக் குறிக்கும் போதெல்லாம் மேலே சொன்ன எளிமைத் தத்துவத்தையே அனுபவித்துச் சொன்னதாகும்.

இத்தகைய இறைவனை ரொம்ப ரொம்ப வழிபாடுசெய்து தேவர்கள் தங்களிடத்திலேயே வைத்துக் கொண்டதாகச் சொல்லலாம். அப்படியே சொல்லட்டும். அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. அன்றி, தேவேந்திரனே தன்னுடைய ஸ்தானத்தில் இறைவனை வைத்துக்கொண்டிருக்கிறான் என்றும் சொல்லட்டும். கவலை இல்லை. காரைக்காலம்மையார் என்ன சொன்னார் என்பதைக் கேட்போம்.

"வானத்தான் என்பாரும் என்க; மற்று உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க;—ஞானத்தான்
முன்நஞ்சத் தால்இருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான்."

—அற்புதத் திருவந்தாதி.

காரைக்கால் அம்மையார் பாடலுக்குத் திருவந்தாதி என்று சொன்னால் போதாதுதான். அற்புதத் திருவந்தாதி என்றே பெயரிட்டார்கள் முன்னோர்கள். அவர்கள் எத்தகைய ரஸிகர்கள் பாருங்கள்!

மகாசந்நிதானம் கூட்டிவைத்த இந்தச் சைவ மகாநாடு மறைபட்டிருந்த பழைய பொன்னையும் மணியையும் மேலே கொண்டுவந்து அனுபவிக்க வாய்த்த இடமாயிற்று. இதுவும் ஒரு புரட்சிதானே.

"பனகணி பூண்டவனைப் பக்தர்களை ஆண்டவனை
அனவரத தாண்டவனை ஆண்டவனை வாழ்த்துவமே."

எனத் தமது இனிய மொழிகளால் உரைத்தனர்.

# திருவாசக வெளியீட்டு விழாவில்

"உலகத்திலே எண்ணற்ற மதங்கள் உள்ளன; ஆயினும் அவைகள் தத்தம் கொள்கைகளில் கொஞ்சமும் தவறுவதில்லே. அத்துடன் அம்மதங்களுக்கெல்லாம் தனித்தனி அடையாளங்கள் உண்டு. அவை சமயச்சின்னம் எனப்படும். அதுபோல நமது சைவத்துக்கும் அடையாளங்களுண்டு. விபூதியும் உருத்திராக்கமும்தான் அவை. சைவசமயம் ஆதிகாலத்தில் கயிலாயமலே யிலிருந்து தோன்றி வளர்ந்துகொண்டேவந்தது; வருகின்றது. அதுமுதற்கொண்டே உருத்திராக்கமும் கயிலாயமலேயில் ஒருவித மரத்திலிருந்து உண்டாகி இந்தியா முழுவதும் இப்பொழுது பரவிவருகின்றது. பலவேறுமதங்கள் எல்லாம் தோன்றி மறைந்துநிற்க, நமது சமயம் மட்டும் இன்றளவும் அழியாது மறையாது வளர்ந்துகொண்டேவருகின்றது. ஆகவே சைவ சமயம் தலேசிறந்தசமயம் என்று சொல்வதில் தடையில்லேயே! மேலும் பிறமதங்களுக்கு இல்லாததான பல அருமையான கொள்கைகளே – கருத்துக்களேத் தன்னகத்தேகொண்டுள்ளது. சர்ஜான்மார்க்ஸ், பெர்ஞட்ஷா போன்ற மேனுட்டு ஆங்கில விற்பன்னர்களுங்கூட, சைவத்தின் சிறப்பையும் திருவாசகத்தின் பெருமையையும் அறிந்து எடுத்துரைத்திருக்கிறுர்கள். சமய வளர்ச்சியில் ஆதீனமடாலயங்கள் பெரும்பணியாற்றிவருகின்றன. அதிலும் சிறப்பாகத் தருமபுர ஆதீனம் காலத்திற்கேற்பப் பணிபுரிவதில் சிறந்துநிற்கின்றது. ஆதீனகர்த்தர் அவர்கள் சமீபத்தில் பிரசாரவாகனமூலம் நாடெங்கும் சமய உண்மையினே எடுத்துப் போதித்துவருவது நாமெல்லாம் அறிந்ததே. அவர்களுக்குத் தமிழ்நாடு என்றும் நன்றிசெலுத்தும் கடப்பாடுடையது. சிவன் புகழை மதுரையிலுள்ளார் எல்லாரும் பாடிஞர்கள் அக்காலத்தில். அதைக்கேட்டு அங்குள்ள கிளிகள் கூட "ஆடல்புரிந்தான் அரனென்றும்......" சிவன் புகழைப் பாடின. திருவாசகத்தின் பெருமைதான் என்னே! யான் சுமார் மூன்றுவருடங்களுக்கு முன் "திருவாசகத்தை அழகாக அச்சிட்டுச் சைவவுலகிற்கு வழங்கிஞல் நலம்" என ஆதீனகர்த்தர் அவர்களுக்குச் சிறு விண்ணப்பம் செய்திருந்தேன். அவர்கள் அதைத் திருவுள்ளத்துக்கொண்டு இப்பொழுது அதனே நிறைவேற்றி அடியேனேயும் கௌரவித்திருக்கிறுர்கள். திருவாசகம் மிக அழகிய முறையில் இப்பொழுது வெளிவந்திருக்கிறது.

435



அதிலும் ஐயாயிரம் புத்தகங்கள் அச்சிட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது இப்புத்தக மாயிற்றே இவைகள்போதுமோ என்று எண்ணவேண்டுவ தில்லை. இவைகள் சைவவுலகிற்கு அச்சாரமாகக் கொள்ள வேண்டும். இன்னும் வேண்டிய அளவு அச்சிட்டு அளிப்பதாகத் திருவுள்ளங் கொண்டுள்ளார்கள். ஆதீன வெளியீடாகிய இப்புத்தகம் வீட்டிற்கு ஒன்று தவறாமல் கிடைக்கும். ஆதீன கர்த்தரவர்களுக்கு மீட்டும் வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.'

# பாராட்டுரை

## திருவாசகம்

தென்னிந்தியாவில் ஒரு முக்கியமான காட்சி தருமபுரத்து மடாலயங்கள் என்று அடிக்கடி நான் சொல்லுவதுண்டு. ஆகவே ஆவணிமூலத் திருநாளன்று அங்குவந்து ஸ்தலத்தை' ஆலயத்தை, திருக்கூட்டத்தை, மாணவர்களை, ஸ்ரீ சொக்கநாத ருக்கான தெய்வீக வழிபாட்டை எல்லாம் கண்ணாரக் கண்டு களித்தேன்.

மகாசந்நிதானம் பிரசாதமாய்க் கொடுத்தருளிய திருவாசகப் பிரதியையே இப்போது உபயோகித்து வருகிறேன். சென்றவிட மெல்லாம் உடன்செல்லுகிறது. விரித்துப் புரட்டிப் படித்தால் காகிதம் உதிர்ந்துபோகுமே என்ற பயம் இல்லை. கடிதமும் உயர்ந்தது. எழுத்துக்கள் தெளிவு. மிக்க திருப்தி.

அடிக்குறிப்புகள் மிக்க பிரயோசனம். சந்தேகம் வந்த வுடன் கீழே பார்த்துக்கொள்ளலாம். அத்தகைய குறிப்புகளைப் புத்தகத்தின் அனுபந்தமாகக் கடைசியில் போடுவதில் அவ்வளவு பிரயோசனம் என்று சொல்லமுடியாது. சந்தேகம் இருந்து விட்டுப் போகட்டுமே என்று ஒத்திப்போட்டு சந்தேகம் நித்திய சந்தேகமாகவே இருந்துவிடும். அடிக்குறிப்பாகப் போட்டதே நல்லமுறை.

பாடல்களின் கவிஉருவம் துலங்கும்படியாகச் சீர்பிரித்தும் போட்டிருக்கிறது. பொருள் காணுவதில் கஷ்டம் ஏற்படாதபடி

சந்திபிரித்தும் போட்டிருக்கிறது. பழைய முறைப்படியும் நன்னூல் தொல்காப்பியத்தின்படியும்,

"வெதுவெமைப் பணிகொளு மாறது கேட்போ
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே"

இவ்வாறு சந்திசேர்த்து அச்சிட்டுவிட்டால் வாசிக்கின்றவர்களைத் திணற அடித்துவிடுகிறோம் என்ற எக்களிப்பு ஏற்படலாம். ஆனால் அறிவுப்புலனுக்கு எளிதாய் இராது. அந்தக் கஷ்டத்தினாலேயே கண்ணுக்கும் அழகாயிராது.

"எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருள்வாயே"

இது கண்ணுக்கே உவந்ததாய் இருக்கிறது. நம்முடைய பதிப்புத்தான் அழகு. மிக்க சந்தோஷம்.

கூடியவரை சீர்கள் நிற்கும் நிலைகளைக்காட்டியும், சந்திகளை ஒதுக்கக்கூடிய இடங்களில் ஒதுக்கியும், பாடல்களின் உருவத்தைத் தெளிவுபடுத்திக் காட்டியிருக்கிறது. பொருள் உணர்ச்சியோடு பாடுவதற்கு இந்த அமைப்பெல்லாம் இன்றியமையாத காரியமே. திருவாசகத்தை ராஜாஜியவர்கள் ரொம்பவும் உள்ளுணர்ந்து அனுபவிக்கிறார்கள். எத்தனையோ வேலைகள், 56 தேசங்கள் அல்ல, 556 தேசங்கள் வந்து அவர்களுடைய யோசனைகளை நாடுகின்றன. நேரத்தை விநாடிக்கணக்கில் விநியோகம் செய்யவேண்டி யிருக்கிறது. இந்தநெருக்கடியில் திருவாசகப் பிரதியைப்பார்த்துப் படித்து அனுபவிக்கமுடிகிறது. ஏதோ சம்பிரதாயத்துக்கு என்று இல்லை. உண்மை உணர்ச்சியோடு ஒட்டி மாணிக்கவாசகரது இதயப்பாங்கை அனுபவிக்கிறார்கள்.

# மதிப்புரைகள்

## திருக்குறள் - உரைவளம்

## பொருட்பால்

தருமபுரம் ஆதீனத்திலிருந்து அறத்துப்பால் ஒரு வருஷத்துக்குமுன் வெளிவந்தது. பொருட்பால் எப்போது வெளிவரப் போகிறது என்று ஆத்திரத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது தமிழ் உலகம். அதுவும் வந்துவிட்டது.

பொருட்பால் சம்பந்தமாகப் பல நூதன கருவிகள் கிடைக்க நேர்ந்தன. அதனுல் மிக விரிவாயும் தெளிவு கொடுப்பதாயும் அமைந்திருக்கிறது பொருட்பால்.

ஒரு வருஷத்தில் இவ்வளவையும் சாதித்திருக்கிருர்களே என்று வியக்கவேண்டியிருக்கிறது.

தொகுப்பாசிரியர் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் பல பெயர்பெற்ற ஆசிரியர்கள் உடனிருந்து வியாழ வட்டங்களாகத் திரட்டிய அரிய விளக்கங்களையும் அனுபவங்களையும் இந்தப் பொருட்பால்ப் பகுதியில்ச் சேர்த்து உதவியிருக்கிருர்கள். திருக்குறளுக்கு இதற்குமுன் யாரும் செய்யாத பெரும்பணி கிடைத்திருக்கிறது. தமிழர்களுக்குத் தனி எக்களிப்புக்கொள்ளக் காரணம் இருக்கிறது.

தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதி அவர்கள் தமிழ்நாட்டுக்கு அளித்துவரும் தர்மங்கள் பலப்பல. அவைகளை விலை உயர்ந்த அச்சாரங்களாக நன்றியுடன் மக்கள் ஏற்றுவருகிருர்கள். "திருக்குறள்–உரைவளம்" தனிச்சிறப்புவாய்ந்த நன்கொடை. அடுத்துவரும் நன்கொடைகளையும் எதிர்பார்க்கவேண்டியது தான். எல்லாம்வல்ல இறைவனது திருவருள் வளமாய் இருக்கிறது நமக்கு.

# திருக்குறள் - உரைவளம்

## காமத்துப்பால்

தற்கால் இலக்கிய உலகில், இன்று பிரமாதப்படுவது நாளை தேடிப்பிடிக்கவேண்டிய காரியமாய்ப் போய்விடுகிறது. மேலைய நாட்டு இலக்கிய சரித்திரத்தில் இதற்கு வேண்டியமட்டும் சான்றுகள் உண்டு.

விஷயம் இப்படியிருக்க இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள ஒரு நூலை நம்மவர் நெடுகிலும் கற்று மதித்துவந்திருக்கிறார்கள் என்றால் நம்மவருக்கு நல்ல பாராட்டுதான்; நூலும் பாக்கியம்செய்தது என்றுதான் சொல்லவேண்டும்.

திருக்குறள்தான் அத்தகைய நூல். இப்போதுகூடத் திருக்குறளை பக்திசிரத்தையோடு படிக்கிறவர்கள் ஆயிரக்கணக்கானபேர். அத்தனைபேரும் ஒரு இனத்தார் ஆகிவிடுகிறார்கள். எவ்வளவு பெரிய லாபம் இது மக்களுக்கு!

தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மகாசந்நிதானம் அருளிய கட்டளையின்படி திருக்குறளுக்கு என்றும் இல்லாத, சகல சார்புகளையும் உள்ளடக்கிய பதிப்பு ஒன்று வெளிவந்திருக்கிறது. மூன்று பால்களுக்குமான உரைகளை எல்லாம் கொடுத்திருக்கிறது.

திருவள்ளுவரது இதயத்தோடு ஒட்டித் திளைத்தவர்களுக்கு குறள்களையும் உரைகளையும் துருவி ஆராய ஆத்திரமே உண்டாகும். அந்த ஆத்திரத்தைத் தீர்க்கக்கூடிய பதிப்பு இது.

நூல் சம்பந்தமாகவும் உரைகள் சம்பந்தமாகவும் எத்தனையோ கேள்விகள் எழுகின்றன; அவைகளைக் குறித்த விரிவான ஆராய்ச்சி ஒன்று பதிப்பாசிரியர் வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் உதவியிருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு நிலையான துணை. வாழ்க தமிழ்!

439

தருமபுர ஆதீன வெளியீடு.

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## முதல் திருமுறை

---

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ். பக்கங்கள் 768.

**விலை விபரம்:**

| | | |
|---|---|---|
| **ராப்பர் பைண்டு:** | ... | ரூ. 3—8—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | | ரூ. 1—5—0 |
| **காலிகோ பைண்டு:** | ... | ரூ. 5—0—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | | ரூ. 1—8—0 |

கிடைக்குமிடம்:—

தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையம்,
41. ஊஸ்மான்ரோடு,
தியாகராயநகர், சென்னை.

உ

குருபாதம்

### பண்ணிசைப் பதிவுத்தட்டுப்

# பாராயணத் திருமுறைப் பாடல்கள்

---

வெளியீடு; தருமபுர ஆதீனம்.

பாடியவர் :

ஆதீன இசைப்புலவர், இசையரசு,

**திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள்**

தயாரிப்பு :

**The Gramaphone Company Ltd., Madras.**

---

இப்பாடல்களைக் கொண்ட இசைத்தட்டுகள், பத்து அடங்கியது.

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40–10—0. |
| பாக்கிங் செலவு | ரூ. | 2—0—0. |
| போஸ்டுமூலம் அனுப்ப தபாற்செலவு | ரூ. | 4—8—0. |

வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிடைக்குமிடம் :—

காஷியர்,

**ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.**

தஞ்சை ஜில்லா.

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் பிரமோற்சவம்

10—4—54 திருமுலைப்பால்
13—4—54 சகோபுர தரிசனம்
14—4—54 திருக்கல்யாணம்
17—4—54 திருத்தேர்
18—4—54 தீர்த்தம்

### திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேசுவரசுவாமி தேவஸ்தானம் சைத்ரோற்சவம்

11—4—54 திருக்கல்யாணம்
13—4—54 சகோபுர தரிசனம்
14—4—54 காலசங்காரம்
17—4—54 திருத்தேர்
18—4—54 தீர்த்தம்

### திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம் சைத்ரோற்சவம்

13—4—54 சகோபுர தரிசனம்
15—4—54 திருக்கல்யாணம்
17—4—54 திருத்தேர்
18—4—54 தீர்த்தம்

### திருவையாறு ஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம் பிரமோற்சவம்

13—4—54 தன்னைத்தான் பூஜித்தது (இடபவாகனம்)
17—4—54 திருத்தேர்
18—4—54 தீர்த்தம்
20—4—54 சப்தஸ்தானப் பிரதக்ஷிணம்

**குறிப்பு:-** உற்சவநாட்களில் ஆதீன சைவப் பிரசாரகர்களையும் பிற அறிஞர்களையும்கொண்டு சொற்பொழிவுகள் நடைபெறும். தேவஸ்தானத் திருமுறை வகுப்பு ஆசிரியர், மாணவ மாணவிகள் திருமுறைப் பாராயணம் செய்வார்கள்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—4—1954.